
கிருஷ்ணர் சூரியனுக்குச் சமமானவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிக்கை நவம்பர் / டிசம்பர் 2009 ரூபாய் 15/-



கிருஷ்ணரிடமிருந்து கிடைப்பதே பக்குவமான அறிவு

கீதை அவதரித்த குருக்ஷேத்திரம்

கீதாசாரம்

ஏன்? பகவத் கீதை 'உண்மையுருவில்'

பக்திப் பரவசத்தை நல்கும் ஸ்ரீமத் பாகவதம்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்


மலர் 1, இதழ் 2 நவம்பர் / டிசம்பர் 2009



2 கிருஷ்ணரிடமிருந்து கிடைப்பதே பக்குவமான அறிவு




கீதாசாரம் 7





11 கீதைக்காக ஒரு குடும்பம்



கீதை அவதரித்த குருக்ஷேத்திரம் 14




19 ஏன்? பகவத் கீதை ‘உண்மையுருவில்’



பக்திப் பரவசத்தை நல்கும் ஸ்ரீமத் பாகவதம் 25

23 பகவத் கீதையைப் புரிந்துகொள்ளுதல்
உத்தமரான ஸ்ரீல பிரபுபாதருடன் ஓர் உரையாடல்

29 ஸ்ரீமத் பாகவதம்

31 தத்துவத் துளிகள்

31 கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

32 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944ல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரி கையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரி கைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்.


**தலைமை:** விஜய கோவிந்த தாஸ்
**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்
**பிழைத் திருத்தம்:** சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்
**தட்டச்சு உதவி:** கோப-கோபிநாத தாஸ், மதன கோபால தாஸ், விசித்ரா
**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவன்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600073. போன்: (044) 22272920

**அச்சிட்டோர்:** கலர் பிரிண்டர்ஸ், சென்னை.



**பதிப்புரிமை** © 2009, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.


பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

## வணக்கம்


ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் இரண்டாம் இதழுக்கு தங்களை வரவேற்கின்றோம். ஸ்ரீ கிருஷ்ணரின் அவதாரத் திருநாளில் உதயமான எமது பத்திரிகை மிகுந்த ஆர்வத்துடன் பக்தகோடிகளால் மதித்து ஏற்கப்பட்டது கண்டு நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி யுற்றோம். ஆதரவளித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றி.

சுமார் 5000 வருடங்களுக்கு முன்பு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு பகவத் கீதையை அருளினார். வருடந்தோறும் கொண்டாடப்படும் அந்த நன்னாள் இவ்வருடம் நவம்பர் மாதத்தின் 28ம் தேதியில் வருகிறது. எனவே, கீதையின் முக்கியத் துவத்தை வலியுறுத்தும்படி இந்த இரண்டாம் இதழ் வடிவமைக்கப்பட்டுள்ளது. மனித சமுதாயத்திலுள்ள அனைவருக்கும், அனைத்துக் காலகட்டத்திலும், பகவத் கீதை மிகமிக அத்தியாவசியமானதாகும். எங்குச் செல்கிறோம் என்பதை அறியாது, அமைதி யின்றி, ஆனந்தமின்றி, அறியாத ஆட்டுக் குட்டிகள் போல அபாயத்தை அணுகிக் கொண்டுள்ள உலக உயிர்வாழிகள், "நான் யார்? கடவுள் யார்? கடவுளுக்கும் எனக்கும் என்ன தொடர்பு? நான் ஏன் துன்பப்படுகிறேன்? மரணத்திற்குப் பின் என்ன நடக்கும்? வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?" போன்றவற்றை அறிந்து கொண்டு, மரணமும் முதுமையும் நோயும் இல்லாத ஆனந்தமயமான வாழ்க்கையை நிரந்தரமாகப் பெறுவதற்கு பகவத் கீதை உதவுகிறது. ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் இந்த இதழ், மக்கள் அனைவரும் பகவத் கீதையைப் படித்து பின்பற்றுவதற்கு ஒரு கருவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

—ஸ்ரீ கிரிதாரி தாஸ், தொகுப்பாசிரியர்

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்



புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர்



ஹரே கிருஷ்ண கீர்த்தனத்தை தோற்றுவித்த கிருஷ்ணரின் அவதாரம், ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

ஸ்தாபக ஆச்சாரியரின் ஆன்மீக உரை


மும்பை, இந்தியா--மார்ச் 21, 1974

# கிருஷ்ணரிடமிருந்து கிடைப்பதே பக்குவமான அறிவு

**வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்**

*மானிடராய் பிறந்து மானிடராய் வாழாமல் மிருகமாக வாழும் மக்கள், அறியாமையினால் அவதியுற்று அல்லல்படுகின்றனர். அறியாமையை நீக்க அறிவு அவசியம், ஆனால் அறிவினை எங்கு அடைவது என்று அறியாமல் அங்குமிங்கும் அலையும் அன்பர்களுக்கு இதோ இங்கு பக்குவமான அறிவின் பாதை விளக்கப்படுகிறது.*



ஶ்ரீ பகவான் உவாச
இமம் விவஸ்வதே யோகம்
ப்ரோக்தவான் அஹம் அவ்யயம்
விவஸ்வான் மனவே ப்ராஹ
மனுர் இக்ஷ்வாகவே (அ)ப்ரவீத்

புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் கூறினார்: அழிவற்ற இந்த யோக விஞ்ஞானத்தை நான் சூரியதேவனான விவஸ்வானுக்கு உபதேசித்தேன். விவஸ்வான் மனித குலத் தந்தையான மனுவிற்கும், மனு, இக்ஷ்வாகு மன்னனுக்கும் இதனை முறையே உபதேசித்தனர். (பகவத் கீதை 4.1)

## பகவானின் தன்மைகள்

பகவத் கீதை, புருஷோத்தமரான முழுமுதற் கடவுளால் (பகவானால்) உரைக்கப்பட்டது. செல்வச்செழுமையுடன் அதிர்ஷ்டம் வாய்ந்த மனிதன், பாக்ய-வான் என்று கருதப்படுகிறான். பாக்ய என்ற சொல்லை அனைவரும் அறிவர், இது பகவானில் உள்ள பக என்னும் மூலத்திலிருந்து வருகிறது. பக என்னும் சொல், செல்வம், வலிமை, புகழ், அழகு, அறிவு, துறவு ஆகிய ஆறுவிதமான ஐஸ்வர்யங்களைக் குறிக்கின்றது. ஒருவனிடம் மிகுந்த செல்வம் இருந்தால் அவன் மக்களை வசீகரிக்கிறான். அதுபோலவே, பலசாலியும் வசீகரமானவனாகக் கருதப்படுகிறான். இப்படியே புகழ்மிக்கவன், அழகன், அறிஞன், துறவி என இவர்களெல்லாரும் வசீகரமுள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இவ்வாறு, இப்பௌதிக உலகில் சிலர் செல்வந்தராகவும் சிலர் வலிமை மிக்கவராகவும் சிலர் பண்டிதராகவும் சிலர் புகழ்பெற்றவராகவும் சிலர் அழகானவராகவும் சிலர் துறந்தவராகவும் இருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் அவர்கள் அனைவரும் அந்த ஐஸ்வர்யத்தின் மிகச்சிறிய பகுதியையே பெற்றுள்ளனர். ஒருவன் மற்றவர்களை விட செல்வந்தனாக இருக்கலாம், ஆனால் எவருமே அனைத்து செல்வம், அனைத்து பலம், என அனைத்தையும் உடையவனாக தன்னைக் கூறிக் கொள்ள முடியாது. எவ்வளவு பலம் பொருந்தியவனாயினும் அவன் ஜட இயற்கையின் கட்டுப்பாட்டில்தான் உள்ளான். அதனை மீறி அவன் செல்ல முடியாது. ஆகவே இந்த ஆறு ஐஸ்வர்யங்களையும் ஒரே சமயத்தில் அளவிடற்கரிய அளவில் பெற்றிருக்கும் ஒருவரை காண்பதரிது. இந்த ஸ்லோகத்தில் *பகவான் உவாச* என்று கூறப்பட்டுள்ளது. கிருஷ்ணரே இந்த ஐஸ்வர்யங்களை முழுமையாக பெற்றுள்ளார் என்பதே இதன் பொருள். அதனை அவர் இப்பூமியில் தோன்றிய போது நிரூபித்தார். அவரது செல்வம் ஈடு இணையற்றதாக இருந்தது.

## கலி யுகம்

தற்போதைய சூழ்நிலையில், ஒருவர் தனது குடும்பத்திற்கு நல்ல வீடு, துணி மணி, நல்ல சாப்பாடு ஆகியவற்றை கொடுக்க முடிந்தாலே, அவன் வெற்றி பெற்ற மனிதனாகக் கருதப்படுகிறான். ஆனால், இவ்வாறு குடும்பத்தைப் பராமரிப்பது என்பது நாய்களாலும் பூனைகளாலும்கூடச் செய்யப்படுகின்றது; அவையும் குடும்பம், மனைவி, பிள்ளைகள் என்று தங்களது நிலைக்கு ஏற்றாற் போல பராமரிக்கின்றன. உண்ணுதல், உறங்குதல், உடலுறவு கொள்ளுதல், தற்காத்துக் கொள்ளுதல் ஆகிய நான்கும் அத்தியாவசியத் தேவைகளாகும். இந்த யுகம் மிகவும் வீழ்ச்சியுற்று இருப்பதால், வாழ்வின் அத்தகு அத்தியாவசியத் தேவைகள்கூட கிடைக்காமல் மக்கள் தவிக்கின்றனர். உணவின்றி மக்கள் பசியினால் வருந்துகின்றனர், உறக்கத்தைப் பற்றி கூறவும் வேண்டுமோ? பெண்களும் ஆண்களும் சரியான நேரத்தில் திருமணம் செய்து கொள்வதில்லை. யாரும் பாதுகாப்பாக இல்லை, அடுத்த நொடியில் என்ன நேரும் என்று எவரும் அறிவதில்லை. இதுவே கலி யுகம் எனப்படும்.

கலி யுகம் எவ்வாறு இருக்கும் என்று ஸ்ரீமத் பாகவதத்தில் (1.1.10) கூறப்பட்டுள்ளது:

*ப்ராயேணால்பாயுஷ: ஷப்ய*
*கலாவ் அஸ்மின் யுகே ஜனா:*
*மந்தா: ஸுமந்த-மதயோ*
*மந்த-பாக்யா ஹி உபத்ருதா:*

இக்கலி யுகத்தில் மக்கள் குறுகிய காலமே வாழ்கின்றனர். வாழ்நாளின் கால அளவு குறைந்து கொண்டே போகிறது. நமது பாட்டனார்களும் முப்பாட்டனார்களும் நூறு வருடங்கள் வாழ்ந்தனர், தந்தை எண்பது வருடங்கள் வரை வாழ்ந்திருப்பார், நாம் அதை விடக் குறுகிய வருடமே வாழ்வோம் என்பதை அனைவரும் அறிவர். இவ்வாறு காலப்போக்கில் வாழ்நாள் இருபது வருடங்களாகக் குறைந்துவிடும். இது ஸ்ரீமத் பாகவதத்தில் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதன், இருபது அல்லது முப்பது வருடங்கள் வாழ்ந்தாலே மிகவும் வயோதிகனாகக் கருதப்படுவான், அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.

## மகிழ்வான வாழ்வு

உணவோ உறக்கமோயின்றி எவ்வாறு ஒருவன் வாழ முடியும். இவை மிகவும் அத்தியாவசியமானவை. *அன்னாத் பவந்தி பூதானி* (பகவத் கீதை 3.14), போதுமான உணவுத் தானியங்களால் மக்களும் விலங்குகளும் மகிழ்ச்சியுடன் வாழ முடியும். குறிப்பாக, இந்தியாவை எடுத்துக் கொண்டால் கொழுத்த நாய், பூனை, அல்லது பசுவைக் காண்பது அரிதாக உள்ளது. ஏனெனில், அவற்றிற்குத் தகுந்த உணவு அளிக்கப்படுவதில்லை.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் நம்மை உண்ணாநோன்பிருந்து ஹரே கிருஷ்ண மஹா மந்திரம் ஜபிக்கச் சொல்லவில்லை. நடைமுறைக்கு ஒத்துவராத எதையும் கிருஷ்ணர் கூற மாட்டார். நன்றாக சாப்பிட்டு நலமுடன் வாழ்ந்து ஹரே கிருஷ்ண மந்திர ஜபம் செய்து வாழ்க்கையை பக்குவமுடையதாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்றே கிருஷ்ணர் கூறுகிறார். அதுவே கிருஷ்ண பக்தி இயக்கம். இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கானது அல்ல, எல்லாருக்கும் நன்மை பயப்பதாகும். அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகின்றோம், மகிழ்ச்சியின்றி அமைதியான வாழ்வு சாத்தியமில்லை.

## பக்குவமான ஞானம்

ஆகையால், அனைத்திலும் பூரணமாக விளங்கும் பகவானிடமிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். பிறழாமல், குற்றங்களின்றி முழுமுதற் கடவுளிடமிருந்து கேட்க முயற்சி செய்யுங்கள். கட்டுண்ட வாழ்வில் நான்கு குறைபாடுகள் உள்ளன: தவறு செய்தல், மாயையின் வசப்படுதல், ஏமாற்றும் தன்மை, மற்றும் பக்குவமற்ற புலன்கள் (*பிரமா, பிரமாத, விப்ரலிப்சா,* மற்றும் *கரணாபாடவ*). நமது பௌதிக வாழ்வில் நாம் அனைவரும் இந்த குறைபாடுகளால் களங்கமடைந்துள்ளோம். இந்த குறைபாடுகளினால் களங்கமுற்றவர்கள் பக்குவமான ஞானத்தை அளிக்க முடியாது. அது சாத்தியமாகாது. பக்குவமற்ற புலன்களை கொண்டு எவ்வாறு பக்குவமான ஞானத்தை திரட்ட முடியும்? பக்குவமற்ற புலன்களைக் கொண்டோர், 'ஒரு வேளை இருந்திருக்கலாம்,' 'அநேகமாக இருக்கலாம்' என்று கூற முடியுமே தவிர, இஃது இவ்வாறே நேர்ந்தது என்று வேதங்களில் இருப்பதுபோல உறுதியாகக் கூற முடியாது.

**இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கானது அல்ல, எல்லாருக்கும் நன்மை பயப்பதாகும். அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகின்றோம், மகிழ்ச்சியின்றி அமைதியான வாழ்வு சாத்தியமில்லை.**

வேதங்களில் பல்வேறு விதமான உயிரினங்களின் எண்ணிக்கை துல்லியமாக கொடுக்கப்பட்டுள்ளது. ஜலஜா நவ-லக்ஷானி ஸ்தாவரா லக்ஷ-விம்ஷதி: கிருமயோ ருத்ர-சாங்க்யகா: பக்ஷினாம் தஷ-லக்ஷணம். நீர்வாழ்வன, தாவரங் கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், மனிதர்கள் உட்பட 84 இலட்சம் வகையான உயிரினங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்பது இலட்சம் நீர்வாழ்வனவும், இருபது இலட்சம் தாவர வகைகளும், பதினோரு இலட்சம் பூச்சி இனங்களும் பத்து இலட்சம் பறவை இனங்களும், முப்பது இலட்சம் விலங்கு இனங்களும் நான்கு இலட்சம் மனித இனத்தவரும் என்று துல்லியமாக கணக்கிடப்பட்டுள்ளது. இதுவே வேத ஞானம். வேத ஞானமே பக்குவ ஞானம். இந்த ஞானம், மிகவும் பக்குவமானது, அழிவற்றது. *அவ்யயம்* என்றால் மாறுபாடுகளும் அழிவும் அற்ற ஒன்று. அதுவே பக்குவ ஞானம். ஆகையால் பக்குவ ஞானம் பெற விரும்புவோர் கிருஷ்ணரிடமிருந்தே கேட்க வேண்டும்.

## பற்றற்ற கிருஷ்ணர்

*ஸ்ரீ பகவான் உவாச* என்று இந்த ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. செல்வம், புகழ், அழகு, அறிவு, வலிமை மற்றும் துறவு ஆகியவற்றை முழுமையாக உடையவர் என்பதால், கிருஷ்ணர் இங்கு பகவான் என்று அழைக்கப்படுகிறார். ஒரு கட்டிடத்தை நாம் கட்டினாலே அதன்மீது மிகவும் பற்றுடையவர்களாக ஆகி விடுகிறோம். ஆனால் கிருஷ்ணரோ இந்த மொத்த பிரபஞ்சத்தையும் படைத்தவர். இருந்தாலும், அவர் இதன்மீது உரிமை கொண்டாடுவதில்லை. இந்த ஜடவுலகை அனுபவிக்க விரும்பும் உயிர்வாழிகளுக்கு இதனைக் கொடுத்துவிடுகிறார்.

## மறுபிறவி

பிரம்மாவிலிருந்து தொடங்கி எறும்பு வரை எல்லாரும் அனுபவிக்கின்றனர். அதன் காரணத்தால் தங்களது சொந்த கர்ம பலன்களை உருவாக்கிக் கொள்கின்றனர். *கர்மனா தைவ நேத்ரேன* (ஸ்ரீமத் பாகவதம் 3.31.1) அத்தகு கர்ம பலன்களால் மற்றொரு உடல் கிடைக்கின்றது. அஃது எறும்பின் உடலாகவோ, பிரம்மாவின் உடலாகவோ, பூனையின் உடலாகவோ, அமெரிக்கனின் உடலாகவோ. இந்தியனின் உடலாகவோ, குரங்கின் உடலாகவோ எதுவாகவோ இருக்கலாம். ஆகவே எவரொருவர் புத்திசாலியோ, அவர் இந்த பிறப்பு இறப்பின் சுழற்சியிலிருந்து எவ்வாறு வெளிவருவது என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். தற்போது செல்வச் செழிப்பான அமெரிக்க உடலில் ஒருவன் இருக்கலாம், ஆனால் அடுத்த வாழ்வு என்ன என்பதை அவன் அறிவதில்லை. மக்கள் வருங்கால வாழ்விற்காக கல்வி கற்கின்றனர், ஆனால் அடுத்த வாழ்விற்காக தங்களைத் தயார் செய்கின்றனரா? மறுபிறவி உண்டா, இல்லையா என்பதைகூட அறியாமல் முட்டாள்களாக உள்ளனரே!

## கிருஷ்ணரிடமிருந்து கேட்டல்

ஆகையால் நாம் பக்குவமான நபரான கிருஷ்ணரிடமிருந்து கேட்க வேண்டும். "ஆத்மா இந்த உடலினுள் இருக்கும்போது குழந்தைப் பருவம், இளமை, முதுமை என்ற உடல் மாற்றங்களைக் கடந்து செல்வதைப் போலவே, மரணத்தின் போது வேறு உடலை ஏற்கிறான்" என்பதை தனது முதல் உபதேசமாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் (2.13) கூறுகிறார். ஆன்மீக கல்வியின் ஆரம்பப் பாடம் இதுவே. நாம் இந்த உடலிலிருந்து மற்றொரு உடலிற்கு மாறுதல் அவசியம். ஆனால் எந்த ஒரு பல்கலைக்கழகமும் ஆத்மா எவ்வாறு ஓர் உடலிலிருந்து மற்றொன்றிற்கு மாறுகின்றது என்பதை பற்றியோ, அடுத்து கிடைக்கப்போகும் உடல் எம்மாதிரியானது என்பதை பற்றியோ கற்பிப்பதில்லை. இந்த விஞ்ஞானம் அங்கு இல்லை. ஆனால் இந்த உடல் மாற்றத்தை பற்றி அறியாமலிருப்பதே உண்மையான துன்பமாகும்.

பக்குவ ஞானத்தை பரம புருஷ பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து நாம் கேட்க வேண்டும். இதுவே முறையான வழிமுறை. உமக்கு உண்மையிலேயே பக்குவமான ஞானம் வேண்டுமெனில் கிருஷ்ணரிடமிருந்து மட்டுமே நீங்கள் கேட்க வேண்டும்.

## பகவத் கீதை எல்லாருக்கும்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மிகவும் கருணை வாய்ந்தவர் என்பதால், அவரே சுயமாக வருகிறார்.

*யதா யதா ஹி தர்மஸ்ய*
*க்லானிர் பவதி பாரத*
*அப்யுத்தானம் அதர்மஸ்ய*
*ததாத்மானம் ஸ்ருஜாம்-யஹம்*
(பகவத் கீதை 4.7)

அவர் மிகக் கருணையுடன் இங்கு சுயமாக வந்து தமது உபதேசங்களை வழங்குகிறார். மேலும், பகவத் கீதையைப் போன்று தனது உபதேசங்கள் பதிவு செய்யப்படுவதற்கும் அவர் வழிவகுக்கின்றார். கிருஷ்ணர் அர்ஜுனனிடம் பேசிய இந்த பகவத் கீதை, வியாசதேவரின் கருணையால் சஞ்சயனால் பதிவு செய்யப்பட்டது. பின்னர் வியாசதேவர் இந்த உரையாடலை மஹாபாரதத்தின் ஒரு பகுதியாக வைத்தார். மஹாபாரதம் என்றால் சிறப்பு வாய்ந்த இந்தியாவின் வரலாறு. இந்த பூலோகம் முழுவதுமே முன்பு *பாரத வர்ஷம்* என்று அழைக்கப்பட்டது. எனவே, மஹாபாரதம் என்பது இந்த முழு கிரகத்தின் (பூலோகத்தின்) வரலாறாகும். அனைத்து மனித வர்க்கத்தினருக்கும் அறிவு புகட்டுவதற்காக பகவத் கீதையானது மஹாபாரதத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தியர்கள், பிராமணர்கள் என்று குறிப்பிட்டவர்களுக்கானது மட்டும் அல்ல. கிருஷ்ணரிடமிருந்து பக்குவமான ஞானத்தை பெற்று இன்புற்று வாழ்வதற்காக அனைவருக்காகவும் தொகுக்கப்பட்டுள்ளது. உண்மையிலேயே ஒருவர் ஆனந்தமடைய விரும்பினால் கிருஷ்ணரது உபதேசங்களை

**மக்கள் வருங்கால வாழ்விற்காக கல்வி கற்கின்றனர், ஆனால் அடுத்த வாழ்விற்காக தங்களைத் தயார் செய்கின்றனரா? மறுபிறவி உண்டா, இல்லையா என்பதைகூட அறியாமல் முட்டாள்களாக உள்ளனரே!**



ஏற்க வேண்டும். நாம் ஏற்கனவே வீழ்ச்சியுற்றவர்களாக உள்ளோம். இந்த வீழ்ச்சியுற்ற நிலையிலிருந்து நம்மை நாம் பாதுகாக்க வேண்டுமெனில், கிருஷ்ணரிடமிருந்து உபதேசத்தை ஏற்க வேண்டும். இதிலிருந்து சற்றும் பிறழாமல் இருக்க வேண்டும்; அயோக்கியத் தனமான வழியில் தான்தோன்றித் தனமாக பகவத் கீதைக்கு வியாக்கியானம் கொடுக்க முயற்சி செய்யக் கூடாது.

## சூரியதேவனுக்கு உபதேசிக்கப்பட்டது

சூரியனை அனைவரும் காண் கின்றனர், ஆனால் அதனுள் என்ன உள்ளது என்பதை பெயரளவு விஞ்ஞானிகளாலோ தத்துவவாதி களாலோ கூற முடியாது. ஆனால் சூரிய தேவனிடம் நேருக்கு நேர் பேச முடியும். கிருஷ்ணர் அவ்வாறு பேசியதற்கான தகவல் இந்த ஸ்லோகத்தில் கொடுக்கப் பட்டுள்ளது. கிருஷ்ணர் முழுமுதற் கடவுள் என்பதால், அவரால் எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். சூரிய கிரகம் வெப்பம் மிகுந்த கிரகம் என்பதால், அங்குள்ள உயிர்வாழிகள் நெருப்பினால் ஆன உடலை பெற்றுள்ளனர். இங்கு வாழும் மக்களின் உடல்கள் நிலத்தினால் ஆக்கப்பட்டவை, அதே போல இதர உலகங்களிலோ அங்கு வசிப்பதற்கு ஏற்றவாறு நீரினாலோ, நெருப்பினாலோ, காற்றினாலோ உடல்கள் இருக்கக் கூடும். உதாரணமாக, நாம் இப்பூமியில் வாழ்வதற்குத் தகுந்த உடலை பெற்றிருக்கலாம். மீன் நீரில் வாழ்வதற்குத் தகுந்த உடலை பெற்றிருக்கலாம். நீரில் வாழ்பவை நிலத்தில் வாழ முடியாது, நிலத்தில் வாழும் நம்மால் சமுத்திரத்தினுள் வாழ முடியாது. நம்மால் நீரில் வாழ முடியாது என்பதால், நீரில் வாழ்வதே அசாத்தியம் என்பது பொருளல்ல. அதுபோல, நம்மால் நெருப்பில் வாழ முடியாது என்பதால், மற்றவர்களாலும் அது முடியாது என்று நினைத்து விடக் கூடாது, அவ்வாறு நினைப்பது முட்டாள்தனம். சூரிய கிரகம் நெருப்பினால் உண்டானது, நெருப்பி னாலான உடல்களைக் கொண்டு அங்கு வசிக்கலாம். எவ்வாறு நீரிலுள்ள சூழ்நிலை நிலத்திலிருந்து மாறுபட்டுள்ளதோ, அதுபோல ஒவ்வொரு கிரகத்திலும் சூழ்நிலைகள் மாறுபடுகின்றன.

## முதல் ஆன்மீக பாடம்

ஆனால் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என அனைத்து சூழ்நிலையிலும் உயிர்வாழிகள் உண்டு. இப்படி பலதரப்பட்ட உடலை உயிர்வாழி களான நாம் ஏற்றிருந்தாலும், நாம் அனைவரும் ஆத்மாக்களே. இந்த உடல் ஓர் உடையைப் போன்றது என்று பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது. நான் இந்தியன் என்னும் உடையையும் நீங்கள் அமெரிக்கன் என்னும் உடையையும் அணிந்துள்ளீர் என்பதே வேறுபாடு. நான் இந்த உடலல்ல என்பதே ஆன்மீகத்தின் முதல் பாடம். பின்னரே ஆன்மீக அறிவு தொடங்குகின்றது. இல்லையெனில், ஆன்மீக ஞானத்திற்கான வாய்ப்பு இல்லை.

எவனொருவன் தன்னை இந்த உடல் என்று தவறாக அடையாளம் காண்கின்றானோ, அவன் ஒரு கொடூரமான விலங்காக கருதப்பட வேண்டும் என்று ஸ்ரீமத் பாகவதத்தில் (10.84.13) கூறப்பட்டுள்ளது. இந்த மிருகத்தனமே உலகெங்கிலும் சென்று கொண்டிருக்கிறது. நான் அமெரிக்கன், இந்தியன், பிராமணன், சத்திரியன் என்று கூறுவதெல்லாம் வெறும் அயோக்கியத் தனமே. இதைக் கடந்து செல்லும் போதே ஆன்மீக ஞானம் தொடங்குகின்றது. அதுவே பக்தி-யோகம். இந்த பக்தி யோக முறையை புரிந்துகொள்வதற்கு *அஹம் ப்ரஹ்மாஸ்மி*, நான் ஆன்மீக ஆத்மா என்பதை உணர்ந்திருக்க வேண்டும். ஏனெனில், பக்தி யோகத்தினால் மட்டுமே ஆன்மீகத் தளத்திற்கு வர முடியும்.

## நமது உண்மையான நிலை

வேதப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நான்கு வர்ணங்கள் மற்றும் ஆஸ்ரமங்களான பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், பிரம்மசாரி, கிருஹஸ்தன், வானபிரஸ்தன், சந்நியாசி போன்ற உடலளவு அடையாளங்கள் அனைத்தையும் பகவான் சைதன்ய மஹாபிரபு நிராகரிக்கிறார். ஒருவரது நிலை என்னவாக இருக்க வேண்டு மென்று அவர் கூறுகிறார்: *கோபி-பர்து: பத-கமலயோர் தாஸ-தாஸானுதாஸ:* (சைதன்ய சரிதாம்ருதம், மத்ய லீலை 13.80), "கோபியர்களது தலைவனின் நித்ய சேவகன்," அதாவது, கிருஷ்ணரது சேவகன். மேலும், *ஜீவேர ஸ்வரூப ஹயா நித்ய-கிருஷ்ண-தாஸ* (சைதன்ய சரிதாம்ருதம், மத்ய லீலை 20.108) என்ற கூற்றின் மூலம், "ஜீவன்களின் உண்மையான அடையாளம், கிருஷ்ண ருக்கு நித்தியமாக சேவை புரிவதே" என்பதை அவர் பிரச்சாரம் செய்தார்.

## கிருஷ்ண பக்தியில் இணையுங்கள்

கிருஷ்ணர் இங்கு வந்ததை பயன்படுத்திக் கொண்டு அவர் விட்டுச் சென்ற பகவத் கீதையை படித்து வாழ்க்கையை பக்குவப்படுத்தி கொள் வோமாக. இதுதான் கிருஷ்ண பக்தி இயக்கம். இஃது ஒரு போலியான இயக்கம் அல்ல, மாறாக விஞ்ஞானப் பூர்வமான இயக்கம். வெளிநாட்டவர் களான ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் இவ்வாய்ப்பினை பின்பற்றி நன்மை அடைகின்றனர், ஏன் இந்திய இளைஞர்கள் இதை எடுத்துக் கொள்ள தயங்குகின்றனர்! இத்தகு தயக்கம் அவர்களுக்கு நல்ல தல்ல. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தை மும்முரமாக பரப்புவோம். அதன் மூலம் துயருற்றிருக்கும் மனித சமுதாயத்தை மீட்க முடியும், இதுவே எமது நோக்கம். மக்கள் துன்புறுவதற்கான காரணம் அறியாமையே. தேவையான அனைத்தும் இங்கு நிறைவாகவே உள்ளது. அயோக்கியர்களாலும் திருடர் களின் தவறான வழி நடத்துதலாலும் மட்டுமே மக்கள் துன்புறுகின்றனர். ஆகையால் நீங்கள் இந்த கிருஷ்ண பக்தியில் பக்குவமுடையவர்களாகி, நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுங்கள். உமது வாழ்வு வெற்றி கரமாக அமையும்.

மிக்க நன்றி. ஹரே கிருஷ்ண!

(தமிழாக்கம்: பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி)



# கீதாசாரம்

## வழங்கியவர்: தெய்வத்திரு. அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்**

தெய்வீக ஞானத்தை அங்கீகரிக்கப்பட்ட சீடப் பரம்பரையின் மூலம் பெறாமல், அனுபவ அறிவை அடிப்படையாகக் கொண்ட விவாதங்களால் கவரப்பட்டு, வழிதவறிச் செல்லும் நபர்களுக்காக பகவத் கீதையின் முக்கிய கருத்துக்களை இங்கு சுருக்கமாக கீதாசாரம் என்னும் தலைப்பில் தொகுத்துள்ளோம். (1940களில் வைராக்ய வித்யா எனும் தலைப்பில் ஸ்ரீல பிரபுபாதரால் வங்காள மொழியில் எழுதப்பட்ட தொடர் கட்டுரைகளில் ஒன்று)

1. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே பரம் பொருள், அவரே புருஷோத்தமரான முழுமுதற் கடவுள், அவரே எல்லா காரணங்களுக்கும் காரணம். "யாரிடமிருந்து இவ்வுலகம் தோன்றியதோ, யாரால் இவ்வுலகம் தோற்றுவிக்கப்பட்டதோ, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றையும் யார் கட்டுப்படுத்துகின்றாரோ, அவரே கடவுள்" என்று கடவுளைப் பற்றி வேதாந்த சூத்திரம் வர்ணிக்கின்றது. எல்லையற்ற பிரிவுகளைக் கொண்ட இந்த பௌதிக உலகம், அளவிட முடியாத ஆன்மீக வானமான வைகுண்டம் ஆகிய இரண்டிற்கும் முக்கிய ஆதாரம் அவரே. ஆன்மீக உருவில் நித்தியமாக வசிக்கும் அவர், உன்னத பரம புருஷராவார். அவரது உடலிலிருந்து வரும் பிரகாசமான ஒளியே பிரம்மஜோதி, அவரோ தன்னிகரற்ற பரம்பொருள். ஒவ்வொருவரின் இதயத்திலும் வீற்றிருப்பவரும், பிரபஞ்சம் முழுவதும் பரவியிருப்பவருமான பரமாத்மா, ஸ்ரீ கிருஷ்ணரின் விரிவங்கமே.

2. ஜீவன்கள், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் நுண்ணிய பகுதிகளாவர். ஜீவன், குணத்தின் அடிப்படையில் இறைவனுடன் ஒன்றாக இருந்தாலும், அளவைப் பொறுத்தவரையில் வேறுபட்டவன். ஏனெனில், பகவான் எல்லையற்றவர், ஜீவனோ மிகச்சிறியவன். பகவானின் நடுநிலை சக்தியில் அமைந்துள்ள ஜீவன்கள், எண்ணிப் பார்க்க முடியாத அளவில் ஒரே சமயத்தில் பகவானுடன் ஒன்றாகவும் மாறுபட்டும் உள்ளனர்.

3. பகவானின் நடுநிலை சக்தியில் உள்ள ஜீவன்கள், வைகுண்டத்திலோ இந்த பௌதிக உலகிலோ நிரந்தரமாக வாழும் தகுதியை உடையவர்கள். ஜீவனின் எண்ணிலடங்காத பாவச் செயல்களே அவன் இந்த பௌதிக அறியாமையில் வீழ்ச்சியுற்று இருப்பதற்கான காரணமாகும். மேலும், இத்தகு களங்கமுற்ற சூழலில், பிரம்மாவின் கிரகத்திலிருந்து பாதாள லோகம் வரை மேலும் கீழுமாக அவன் பயணம் செய்கின்றான். பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் ஆகியவற்றை இப்பௌதிக உலகில் அனுபவிக்கும் ஜீவன், மனதாலும் உடலாலும் எழும் துன்பங்கள், மற்ற உயிர்வாழிகளால் கொடுக்கப்படும் துன்பங்கள், தேவர்களால் வரக்கூடிய துன்பங்கள் (இயற்கைச் சீற்றங்கள்) ஆகிய மூவகைத் துன்பங்களையும் ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தப்படுகின்றான்.

4. பௌதிக உலகம் என்றழைக்கப்படும் பலமுகம் கொண்ட சிறைச்சாலையில் ஜீவன்கள் அடைக்கப்பட்டுள்ளனர். படைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு, அழிக்கப்படுவதே இவ்வுலகின் இயற்கையாகும். படைப்பின் போதும் பராமரிப்பின் போதும் இந்த பௌதிக இயற்கை தோன்றிய நிலையில் இருக்கும், அழிவின் போது அது மறைந்துவிடுகிறது. சில நேரத்தில் தோன்றியும் சில நேரத்தில் தோன்றாமலும் இருப்பதால், இந்த பௌதிக மாய உலகம், பகவானின் தாழ்ந்த சக்தியாகும்.

5. தோன்றி மறையும் பகவானின் இந்த பகிரங்க (வெளிப்புற) சக்திக்கு அப்பால், திவ்யமானதும் ஆன்மீகத் தன்மை வாய்ந்ததுமான மற்றொரு இயற்கை உள்ளது. அஃது என்றென்றும் நிலைத்திருக்கும் வைகுண்டம் எனப்படும் ஆன்மீக வானமாகும். அந்த ஆன்மீக உலகம் என்றும் நிலைத்திருப்பது, அஃது என்றுமே மறையாது. படைப்பிற்கோ அழிவிற்கோ அஃது உட்பட்டதல்ல.

6. மாயையான இந்த பௌதிக இயற்கையுடன் தன்னை அடையாளம் காண்பதால், கர்வத்தின் காரணத்தினால், பரம புருஷ பகவானைப் பற்றி

### பகவத் கீதை அன்றி வேறு கதி உண்டோ?

கார்கலந்த மேனியான் கைகலந்த ஆழியான்
பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான் - சீர்கலந்த
சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையின் ஆழ்துயரை
என்னினைந்து போக்குவரிப் போது

கருமை நிற மேனியுடையவரும் கையில் சக்கரம் ஏந்தியவரும் (நன்கு உழுத) நிலம் போன்ற வலிமையான வயிற்றினை உடையவரும் பாம்பில் சயனிப்பவருமான ஸ்ரீ கிருஷ்ணரின் சிறப்பு வாய்ந்த சொற்களை (பகவத் கீதையை) நினைத்து போக்காவிடில் நம்மைச் சூழ்ந்துள்ள வினைகளின் ஆழ்ந்த துயரை வேறு எதை நினைத்து போக்க முடியும்?

—நம்மாழ்வார் அருளிய பெரிய திருவந்தாதி (86)

அறிந்துகொள்வதில் எந்தவொரு கட்டுண்ட ஜீவன் அக்கறை காட்டுவதில்லையோ, அத்தகையவன் மஹாகாளி, சண்டி, துர்கா என பலவாறு அறியப்படும் பகவானின் மாய சக்தியினால் தண்டனைக்கு உட்படுத்தப்படுவான். அத்தகு அசுர ஜீவன்களை மூவகை துயரங்கள் என்னும் திரிசூலத்தினால் துளைக்கும் காளி, தனது மாய சக்தியினால் அவர்களை அடிமைப்படுத்துகிறாள். எல்லா வேதங்களின் சாரமான பகவத் கீதை கட்டுண்ட ஆத்மாக்களை விடுவிப்பதற்காகவே உபதேசிக்கப்பட்டது. கீதையை கவனத்துடன் படிப்பதால், பரம புருஷ பகவானின் பாதகமலங்களில் தஞ்சமடையும் ஜீவன், பௌதிக உலகின் துன்பச் சக்கரத்திலிருந்து விடுதலை பெற முடியும்.

7. ஜடவுலகின் தீராத துன்பங்களான பிறப்பு, இறப்பு, முதுமை மற்றும் வியாதி யினால் கட்டுண்ட ஜீவன் அவதியுறு கிறான். இந்தத் துன்பங்களை பொறுக்க முடியாதபோது, அவன் உதவியை எதிர்பார்க்கின்றான். அச்சூழ்நிலையில் அருவவாத முக்திப் பாதையை தழுவும் சிற்றறிவுடையோர், தங்களது இலக்கை அடைய கடுந்தவங்களை மேற்கொள் கின்றனர். பகவானின் பக்தர்களோ இந்த முக்தி வாதிகளை விட உயர்ந்த நிலையில் உள்ளனர். ஏனெனில், பகவானின் சேவகனாக இருப்பதே தங்களது உண்மை நிலை என்பதை அவர்கள் நன்கு உணர்ந்தவர்கள். அத்தகு பக்தர்கள், சேவை செய்யும் அந்த மனப்பான்மையை அழிக்க முயற்சி செய்வ தில்லை; மாறாக, நித்திய மான பக்தி முறையை பயிற்சி செய்து, அதை மற்றவர் களுக்கு பிரச்சாரமும் செய்கின்றனர். ஆகையால், அவர்கள் பகவானின் நித்திய மான ஆன்மீக உலகத்திற்குள் நுழைவதற்கான தகுதியைப் பெறுகின்றனர். பக்தித் தொண்டு என்னும் இந்த நித்திய முறையை பயிற்சி செய்யும் உரிமை எல்லா ஜீவன்களுக்கும் உண்டு.



8. **மஹத்தத்த்வம்** எனப்படும் பௌதிக இயற்கை, தன்னை இருபத்தி நான்கு மூலக்கூறுகளாக வெளிப்படுத் துகின்றது: 1) தோன்றாத அடிப்படை மூலம், 2) அஹங் காரம், 3) புத்தி, 4) மனம், 5) ஆகாயம், 6) காற்று, 7) நெருப்பு, 8) நீர், 9) நிலம், 10) சப்தம், 11) தொடு உணர்வு, 12) ரூபம், 13) சுவை, 14) நுகர்ச்சி, 15) காதுகள், 16) தோல், 17) கண்கள், 18) நாக்கு, 19) மூக்கு,

20) வாய், 21) கைகள், 22) கால்கள், 23) குதம், 24) பாலுறுப்புகள்.

9. தன்னிகரற்ற பூரண உண்மை யான மூல முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர், இப்பௌதிக உலகிற்கு பிரம்மாவின் ஒவ்வொரு பகல் பொழுதிலும் ஒருமுறை வருகிறார். அதாவது, 864,00,00,000 சூரிய வருடங்களில் ஒருமுறை, தன்னிடம் சரணடைந்த பக்தர்கள், மற்றும் அபக்தர்களான நாத்திகர்கள் ஆகிய இருவரிடமும் தனது கருணையை பொழிவதற்காக அவதரிக்கின்றார். அவர் தனது பக்தர்களைக் காத்து, நாத்திக அசுரர்களை வதம் செய்கிறார். இவ்வாறு வதம் செய்யப்படும் அசுரர்களுக்கும் ஒருவகையான விடுதலையை (அருவவாத முக்தியை) அளிக்கிறார். ஆனால் பகவத் கீதையோ, பரம புருஷ பகவானுக்கு பக்தித் தொண்டு செய்வதால் அடையப்படும் முக்தியைப் பற்றி கற்பிக்கின்றது. அத்தகு பக்தித் தொண்டை அடைவதற்கான ஒரே வழி, முறையான சீடப் பரம்பரையில் வரும் ஆன்மீக அதிகாரியான குருவிடம் முழுமையாக தஞ்சமடைய வேண்டும். ஆன்மீக குருவை வழிபடாமல், பாடுபட்டு முயற்சிப்போர் தங்களது முயற்சிகள் பலனற்றுப் போவதை உணர்வர்.

10. அங்கீகாரம் பெற்ற குருவிடம் தஞ்சமடைய மறுக்கும் அனைத்து முட்டாள் ஜீவாத்மாக்களும் உண்மையில் பாதுகாப்பற்றவர்கள். குருவுடைய வழிகாட்டுதலற்ற இத்தகு அயோக்கியர்கள் தங்களை எல்லாமறிந்த மேதாவிகளாகக் கருதுகின்றனர். மேலும், அத்தகு தவறான அபிப்பிராயத்தின் அடிப்படையில், கடவுளை மனிதனாகவும், இறந்து போகக்கூடிய சாதாரண மனிதனைக் கடவுளாகவும் வழிபடுகின்றனர்.

11. முழுமுதற் கடவுள் ஆறு ஐஸ்வர்யங்களில் முழுமையானவர். அவர் எந்தவொரு குறிப்பிட்ட பிரிவினருக்கோ மதத்தினருக்கோ தேசத்திற்கோ சொந்தமானவர் அல்ல. அவர் எல்லோருக்கும் கிட்டக்கூடியவர், எல்லோரையும் விடுவிக்கக்கூடியவர், மேலும், எல்லோரின் பரம தந்தையும் அவரே. இப்பௌதிக உலகிலுள்ள ஒவ்வோர் உயிர்வாழியையும் விடுவிப்ப தற்காகவே அவர் தோன்றுகிறார். ஆகவே பகவத் கீதையிலுள்ள அவரது அனைத்து உபதேசங்களும் பூமியிலுள்ள எல்லா மக்களுக்கும் பயனளிக்கக்கூடியவை. பகவத் கீதை எல்லா இடங்களிலும் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். ஆகவே, பகவானின் அச்செய்தியை பரப்பும் பாக்கியமான ஜீவன்கள், அவருக்கு மிகவும் பிரியமானவர்களாவர்.

12. பகவானது மாய சக்தியின் பிடியிலுள்ள முட்டாள் அசுர அயோக்கி யர்கள், தங்களது பௌதிகத் திட்டங் களைப் பற்றி பீற்றிக் கொள்வர். பகவத் கீதையினால் மட்டுமே அவர்களது அறியாமை என்னும் பலமான கோட்டை யினுள் ஊடுருவிச் சென்று, உண்மைக்கு அவர்களைத் தட்டி எழுப்ப முடியும்.

13. ஒற்றுமையுடன் பலமான பிரச்சாரம் செய்வதன் மூலம், கிருஷ்ண பக்தர்கள், அத்தகு முட்டாள் மனிதர்களிடம், அவர்களது பெயரளவு திட்டங்கள் நிச்சயமாக தரைமட்டமாகி விடும் என்றும், கனவு வீட்டைக் கட்டுவதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த நிலம் உண்மையில் கானல் நீரைப் போன்ற மாயையே என்றும், தெரிவிக்க வேண்டும். உண்மை வேறு இடத்தில் உள்ளது. அந்த உண்மையான இராஜ்ஜியத்திற்கு ஒருவரை மாற்றத் தேவையான அனைத்து தகவல்களும் *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்* என்னும் பத்திரிகையில் கிட்டும்.

14. ஆகவே, ஒரு சிறந்த சமூ கத்திற்கான உண்மையான அறிகுறி என்னவெனில், அதன் குடிமக்கள் *ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தினால்* கவரப்பட்டு, ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தைப் பெறுவதற்கான வழிமுறையை ஏற்று, முழுமுதற் கடவுளின் திருநாட்டிற்குத் திரும்பிச் செல்வர். அவர்கள் தங்களது அந்த உண்மையான வீட்டில் நித்தியமாக வசிக்க முடியும். இவ்வாறு செய்வதால் மட்டுமே பலனற்ற செயல்கள் அனைத்திற்கும் அவர்கள் முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

15. எவ்வாறு பாவகரமான பாதகன் தனது மரணத்திற்குப் பின் உடல் கிடைக்காமல் ஆவியாக சூட்சும உடலில் சுற்றித் திரிவானோ, அவ்வாறே, அருவவாதிகள், திவ்யமான தளத்தில் முக்தி வரை உயர்ந்தாலும், முழுமுதற் கடவுளுக்கு அன்புத் தொண்டு செய்யும் மனோநிலையை வளர்த்துக் கொள்ளாத காரணத்தினால், அவர்கள் மீண்டும் பௌதிக உலகினுள் வீழ்ச்சியடைவர். எனவே, அருவவாதிகள் மேற்கொள்ளும் கடும் தவங்கள், நித்திய தர்மமான பக்தித் தொண்டிற்கு என்றுமே நிகராகாது.

16. அருவவாதிகள் (அத்வைதிகள்) பகவானின் உருவமற்ற (அவ்யக்த) தன்மையில் மிகவும் பற்றுக் கொண்டுள்ளதால், அவரது உன்னத உடலையும் அவரையும் வேறுபடுத்திக் காண்கின்றனர். அக்குற்றத்தினால் அவர் களது உணர்வு களங்கமடைந்துள்ளது. இதனால் பகவானின் நித்தியமான இருப்பிடத்தில் அவர்களுக்கு இடம் இல்லை. ஆயினும், ஏதோ ஒரு நல்ல திர்ஷ்டத்தினால், அவர்கள், தூய பக்தர் களுடைய தொடர்பைப் பெற்று அந்த பக்தர்களிடமிருந்து பகவானின் தெய்வீக நாமம், ரூபம், குணம், அற்புத லீலைகள் மற்றும் பலவற்றை நம்பிக்கையுடன் கேட்கும் போது, நிச்சயமாக தங்களின் களங்கங்களிலிருந்து தூய்மையடை கிறார்கள். பின்னர், பகவானின் போற்றத் தக்க குணநலன்களால் கவரப்பட்டு, இறுதியாக அவரிடம் முழுமையாக சரணடைவர். இவ்வாறாக, பகவானின் நித்திய லீலைகளில் நுழைய விரும்பு வோருக்கு, பகவத் கீதை உபதேச பாடமாக அமைகிறது. சரணடைவதற்கான முதல் நிலையை பகவத் கீதையிலுள்ள தெளிவான செய்தி கற்பிக்கின்றது. இறுதி இலக்கை அடைவதற்கு இந்த சரணாகதி நிச்சயம் தேவை. பகவத் கீதையின் கருத்துப்படி பார்த்தால், சரணடைதல் என்னும் இந்த தேர்வில் தூய பக்தர்கள் வெற்றிகரமாகத் தேர்ச்சியடைந்துள்ளனர் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

(தமிழாக்கம்: பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி)

# அனைத்து மக்களுக்கும் பகவத் கீதை

தினமும் குளிப்பதால் ஒருவன் தூய்மையடைகிறான், கீதை என்னும் புனித கங்கையில் குளிப்பவனோ உடனடியாக இவ்வுலகின் எல்லா களங்கங்களிலிருந்தும் தூய்மையடைகிறான். இத்தகு மகத்துவம் கொண்ட கீதையை படிப்பவனுக்கு வேறு எந்த நூலையும் படிக்க வேண்டிய அவசியமே இல்லை. உண்மையில், அனைத்து நூல்களையும் படித்தல் என்பது தற்போதைய உலகில் சாத்தியமானதும் அல்ல. கீதை ஒன்றே போதுமானது. கீதை என்னும் இந்த அமிர்தத்தைப் பருகுபவன் பௌதிக வாழ்வின் அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுபட்டு முக்தியடைவது உறுதி. அதனால் அதனை அனைவரும் அடைவது அவசியம்.

வருடந்தோறும் டிசம்பர் மாதத்தில் கீதை தோன்றிய நாள் வருகின்றது. அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரின் புத்தகங்கள் வருடம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு வந்தாலும், டிசம்பர் மாதத்தில் அதிக ஆர்வத்துடன் பக்தர்கள் இந்த புத்தக விநியோகத்தில் ஈடுபடுவது வழக்கம். உலகெங்கிலும் உள்ள கிருஷ்ண பக்தர்கள் டிசம்பர் மாதம் முழுவதும் ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களை, குறிப்பாக 'பகவத் கீதை உண்மையுருவில்' என்னும் புத்தகத்தினை பரவலாக விநியோகம் செய்து வருகின்றனர்.

இந்த 'பகவத் கீதை உண்மையுருவில்', உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனின் கரங்களையும் அடைய வேண்டும். அதற்கு உங்கள் ஒவ்வொருவரின் உதவியும் அவசியம். முதல் உதவி: தங்களிடம் 'பகவத் கீதை உண்மையுருவில்' இல்லாவிடில், ஒரு பிரதியை அருகிலுள்ள இஸ்கான் கோவிலிலிருந்து அல்லது தங்கள் பகுதிக்கு வரும் இஸ்கான் பக்தரிடமிருந்து முதலில் பெற்றுக் கொள்ளுங்கள். தங்களிடம் 'பகவத் கீதை உண்மையுருவில்' இருந்தால், அதை நீங்கள் சிறிதளவு படித்திருந்தால், மற்றவர்களுக்கும் அதனை வழங்க வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்குள் எழுவது நிச்சயம். அருகிலுள்ள இஸ்கான் பக்தர்களை தொடர்பு கொண்டு அவர்களுடன் இணைந்து இந்த பகவத் கீதையை தன்னலம் கருதாது கிருஷ்ணரின் தொண்டாக விநியோகிப்பீராக. மேலும், இப்புத்தகத்தை மலிவு விலையிலோ இலவசமாகவோ வழங்க தாங்கள் நிதியுதவியும் செய்யலாம். அது சாஸ்திர தானம் எனப்படும். தானங்களில் சிறந்தது பிராமணர்களுக்கு வழங்கப்படும் அன்னதானம்; அதைவிடச் சிறந்தது பிராமணர்களுக்கு பசுவை அளித்தல்; அதனைக் காட்டிலும் உயர்ந்தது சாஸ்திர தானம்; எனவே, சாஸ்திரங்களின் சாரமாக விளங்கும் பகவத் கீதையை தானம் செய்தால், அஃது எல்லா தானத்தையும் விட மிகவுயர்ந்த தானம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அதுமட்டுமின்றி, கீதையை விநியோகிப்பவர்கள் பகவான் கிருஷ்ணருக்குப் பிரியமானவர்களாவர், அவர்களைக் காட்டிலும் பிரியமானவர் எவருமில்லை என்று கீதையிலேயே (18.69) ஸ்ரீ கிருஷ்ணர் விளக்கியுள்ளார். கிருஷ்ணருக்குப் பிரியமானவனாக ஆக நீங்கள் தயாரா? உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள், அருகிலுள்ள இஸ்கான் கோவிலை!



திருநள்ளாறில் நடந்த சனிப்பெயர்ச்சி விழாவில் கீதையை ஆர்வத்துடன் வாங்கும் பொதுமக்கள் (26.09.09)

**கீதை மட்டும் இருக்கட்டும்!**

ஏகம் சாஸ்த்ரம் தேவகீ-புத்ர-கீதம்
ஏகோ தேவோ தேவகீ-புத்ர ஏவ
ஏகோ மந்த்ரஸ் தஸ்ய நாமானி யானி
கர்மாப்-யேகம் தஸ்ய தேவஸ்ய ஸேவா


உலகம் முழுமைக்கும் ஒரே பொது நூல் இருக்கட்டும்—பகவத் கீதை. உலகம் முழுமைக்கும் ஒரே கடவுள் இருக்கட்டும்—ஸ்ரீ கிருஷ்ணர். அவரது திருநாமமான ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்ற ஒரு மந்திரம் மட்டும் இருக்கட்டும். அந்த முழுமுதற் கடவுளுக்கு தொண்டு செய்தல் என்னும் ஒரே ஒரு செயல் மட்டும் இருக்கட்டும்.

—சங்கரர் அருளிய கீதை மஹாத்மியம் 7


கீதைக்காக ஒரு குடும்பம்
ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூரால்
அருளப்பட்ட உபதேச கதை
ஒரு பிரபலமான குரு தனது சீடனிடம் பகவத் கீதையின் பிரதி ஒன்றை கொடுத்தார்
இந்த பகவத் கீதையை தினமும் படித்து, வாழ்வை பக்குவப்படுத்திக் கொள்.
அப்படியே செய்வேன் குருவே!
விந்திய மலைக்குச் சென்று அங்கிருந்த ஒரு குகையினுள் அவன் கீதையைப் படிக்க ஆரம்பித்தான்
தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே சமவேதா யுயுத்ஸவ மாமகா பாண்டவஷ் சைவ கிம் அகுர்வத சஞ்ஜய
குகையினுள் இருந்த ஒரு சுண்டெலி கீதையின் பக்கங்களை தினமும் கடித்து சாப்பிடத் தொடங்கியது
ஓ கடவுளே! இந்த எலி என்னை பாடாய் படுத்துதே. ஒரு பூனையை கொண்டு வந்து இதன் குறும்பை அடக்குவேன்.


சுண்டெலி ஓடிவிட்டது. ஆனால் பூனையோ பாலுக்காக கத்திக் கொண்டிருக்க, பகவத் கீதையைப் படிப்பது சிக்கலானது.
பூனை அழுவதை நிறுத்த பால் வேண்டும். தினமும் பால் வாங்குவதில் பல பிரச்சனைகள் உள்ளன. ஒரு பசு இருத்தல் அவசியமாக தென்படுகிறது.
கடவுளின் கருணையால் ஒரு நல்ல மனிதர் பசு ஒன்றை தானமாகக் கொடுத்தார்.
பசு வசதியாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதற்காக, மிகவும் சிரமப்பட்டு அவன் ஒரு தொழுவத்தையும் அமைத்தான்.
பசு வந்திட்டது. ஆனால் இதனை பராமரிப்பது பெரிய வேலையாக உள்ளதே.
இந்த பசுவிற்கு புல்லைக் கொடுத்து தண்ணீர் காட்டுவது சிரமமாக உள்ளதே. இதனைப் பராமரிப்பதால், பகவத் கீதை படிக்க நேரம் கிட்டுவதில்லை. ஒரு இடையனை வேலைக்கு வைக்கலாம்.










### கருத்து

மக்களிடமிருந்து விலகி ஆஸ்ரமத்திலோ புனித தலத்திலோ தனியாக வசித்து பகவானின் பக்தித் தொண்டில் ஈடுபட விரும்பும் நபர்கள், இதுபோன்று குடும்ப பந்தங்களில் மாட்டிக் கொள்ள வாய்ப்புள்ளது. தங்களது தினசரி தேவைகள், கடமைகள் போன்றவற்றில் மூழ்கியோர், பகவான் ஸ்ரீ ஹரியின் பக்தித் தொண்டு என்ற பெயரில் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வர். பக்தித் தொண்டிற்குத் தேவையான பொருள்களை சேகரிக்கும் எண்ணத்தில், மாயையின் பிடியில் விழுந்துவிடக் கூடாது. மிகுந்த எச்சரிக்கை அவசியம்.

ஜடப் புலன்கள் எப்போதும் புலனின்பத்திற்காக ஏங்கிக் கொண்டுள்ளன. மிகச்சிறந்த முக்தி பெற்ற சாதுக்களின் உபதேசங்களைப் பின்பற்றுவது போலவும், அவர்களிடமிருந்து கவனமாகக் கேட்டு பக்குவமடைவது போலவும் நடிக்கும் நமது கட்டுக்கடங்காத பொல்லாத குறும்புத்தனமான மனம், பக்தித் தொண்டிற்கு சாதகமானது என்ற பெயரில் நம்மை புலனின்பத்தை நோக்கிக் கொண்டு சென்று, நம்மை கடடதாரியாக ஆக்கி விடும்.

### கருத்து

நம்மில் பலர், சாஸ்திரங்களைப் படிக்கின்றோம் என்ற பெயரில் லௌகிக அறிவினால் கவரப்படுகிறோம். பகவான் ஸ்ரீ ஹரிக்கு பக்தித் தொண்டு செய்த வண்ணம் குடும்ப வாழ்வையும் முறையாகப் பார்த்துக் கொள்கிறேன் (யுக்த-வைராக்யம்) என்ற போர்வையில், உடல் சௌகரியம், மனைவி, குழந்தைகள் போன்றவற்றின் மீது மிகுந்த பற்றுடையவராகி விடலாம். கிருஷ்ண பக்திப் பாதைக்கு வந்த பின்னரும், நம்மில் பலர், பெயர், புகழ், பதவி போன்றவற்றை விரும்புகின்றனர், ஜடவுலகை அடக்கியாள விரும்புகின்றனர். இவை ஆன்மீகப் பேரழிவை ஏற்படுத்துபவை.

எனவே, தூய பக்தர்களின் களங்கமற்ற உறவைப் பெற்று, அவர்களிடம் நேர்மையான முறையில் நமது குறைகளை முழுமையாக வெளிப்படுத்தி, அவர்களின் கருணையை வேண்ட வேண்டும். அப்போது அவர்களது ஈடுஇணையற்ற வழிகாட்டுதலால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். — பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர்

வரைபட உதவி: www.iskcondesiretree.com

# பகவத் கீதை அவதரித்த குருக்ஷேத்திரம்

*பெரும் தர்ம யுத்தங்களும், புண்ணியச் செயல்களும் நடந்த புராதன வட இந்திய தலம்*

வழங்கியவர்: தவத்திரு லோகநாத ஸ்வாமி

புதுதில்லியிலிருந்து சுமார் நூறு மைல் தொலைவில் அமைந்துள்ள குருக்ஷேத்திரம் என்னும் இடத்தில்தான் மஹாபாரதப் போர் நடந்தது என்பதும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையை உபதேசித்தார் என்பதும் யாவரும் அறிந்ததே.

ஆனால் அதற்கும் முன்பே, புராதன இந்தியாவின் வரலாற்றிலும் பண்பாட்டிலும் குருக்ஷேத்திரம் ஒரு முக்கிய பங்கை வகித்துள்ளது. குருக்ஷேத்திரத்தின் முக்கியத்துவம் பல வேத இலக்கியங்களில், குறிப்பாக பகவத் கீதை, மஹாபாரதம், புராணங்கள் மற்றும் உபநிஷத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அது தேவர்களுடைய இருப்பிடமாகவும், தவத்திற்கு உகந்த இடமாகவும் விவரிக்கப்பட்டுள்ளது.

குருக்ஷேத்திரத்தின் சூழ்நிலை தற்பொழுதும் வேத மந்திரங்களால், முக்கியமாக, பகவத் கீதையினால்



நிரம்பியுள்ளது. பகவத் கீதையின் முதல் ஸ்லோகம் குருக்ஷேத்திரத்தை தர்மக்ஷேத்திரமாக அதாவது “தர்மத்தின் விளைநிலமாக” சுட்டிக்காட்டுவதிலிருந்து கீதை பிறப்பதற்கு முன்பே அஃது ஒரு புனிதத் தலம் என்பதை நாம் அறியலாம்.

ஹரியானா மாநிலத்தில், புண்ணிய நதிகளான சரஸ்வதிக்கும் திருஷாத்வதிக்கும் இடையில் நூறு சதுர மைல் பரப்பளவு கொண்ட குருக்ஷேத்திரத்தில், இன்று பல புராதன கோவில்களையும், புனித குளங்களையும் காண முடியும்.

### மாமன்னன் குரு

குருக்ஷேத்திரம் முன்னாளில் பிரம்ம க்ஷேத்திரம், பிருகுக்ஷேத்திரம், ஆரிய வர்த்தம் மற்றும் ஸமந்த பஞ்சகம் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டு வந்தது. பின்னர் “குரு” என்ற மன்னனின் செயல்களால் அதற்கு “குருக்ஷேத்திரம்” என்ற பெயர் ஏற்பட்டது.

பாண்டவர்களின் பிரசித்திபெற்ற மூதாதையரான மன்னன் குரு எவ்வாறு இவ்விடத்தை ஆன்மீகப் பண்பாட்டின் மிகச்சிறந்த மையமாக திகழச் செய்தார் என்பதை மஹாபாரதம் கூறுகிறது. மன்னன் குரு ஒரு தங்கத் தேரில் இவ்விடத்தை அடைந்து, தேரின் தங்கத்தைக் கொண்டு ஒரு கலப்பையை செய்தார். பிறகு சிவபெருமானின் எருதையும், எமராஜனின் எருமையையும் கடனாகப் பெற்று நிலத்தை உழத் தொடங்கினார்.

அப்பொழுது அங்கு வந்த இந்திரன், குருவிடம் அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என வினவிய போது உண்மை, யோகம், இரக்கம், தூய்மை, கொடை, மன்னிப்பு, தவம் மற்றும் பிரம்மசரியம் போன்ற எட்டு சீரிய மதக்கொள்கைகளை வளர்க்க நிலத்தை தயார் செய்து கொண்டிருப்பதாக மன்னன் கூறினார்.

இந்திரன் மகிழ்ந்து மன்னனிடம் ஒரு வரத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கூறினான். மன்னனும், அவ்விடம் தன் பெயரால் வழங்கப்பட்டு புனித தலமாக திகழவேண்டும் என்றும்,



அவ்விடத்தில் இறப்பவர்கள் (பாவ புண்ணியங்கள் எப்படியிருந்தாலும்) ஸ்வர்க லோகம் செல்ல வேண்டும் என்றும் வரத்தைக் கேட்டார். இந்திரன் அவரது கோரிக்கைகளை நிறைவேற்ற தயங்கினார். மன்னனும் தளர்ச்சியடையாமல் கடும் தவங்களைப் புரிய, கொஞ்சம்கொஞ்சமாக இந்திரனின் மனம் மாறியது. ஆனால், யாகங்கள் செய்யாமல் வெறுமனே அங்கு மரணமடைவதால் மட்டும் ஒருவன் ஸ்வர்கத்திற்கு ஏற்றம் பெற இயலாது என மற்ற தேவர்கள் ஆட்சேபித்தனர்.

இறுதியில் குருவிற்கும் இந்திரனுக்கும் இடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி, அவ்விடத்தில் போரினாலோ தவத்தினாலோ எவரேனும் மடிந்தால், இந்திரன் அவர்களை ஸ்வர்கத்திற்குள் அனுமதிப்பான் என்பதே. ஆகையால் குருக்ஷேத்திரம் புண்ணிய ஸ்தலமாகவும், போர் புரிய ஏற்ற இடமாகவும் ஆனது.

## மஹாபாரதப் போர்

பாண்டவர்கள் தங்கள் உரிமையை திருதராஷ்டிரரிடமும் அவரது மகன்களான கௌரவர்களிடமும் கேட்ட போது, குரு நிலத்தின் தென்பகுதியில் இருந்த காண்டவ வனம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அங்கு அவர்கள் இந்திரபிரஸ்தம் என்ற அற்புத நகரினை உருவாக்கினர். தற்போது அந்த இடத்தில் டில்லி அமைந்துள்ளது. கௌரவர்கள் வடகிழக்கில் உள்ள ஹஸ்தினாபுரத்தை தலைநகராக கொண்டனர். பின்னர் யுதிஷ்டிரர் பகடை ஆட்டத்தில் தோற்கடிக்கப்பட்டதால் பாண்டவர்கள் பதிமூன்று ஆண்டுகள் வனவாசத்திற்கு உட்படுத்தப்பட்டனர்.

வனவாசம் முடிந்த பின் பாண்ட வர்கள் தங்கள் இராஜ்ஜியத்தை திரும்பக் கேட்டனர். துரியோதனன் அதற்கு மறுக்க, பாண்டவர்கள் சார்பாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், துரியோதனனிடம் ஐந்து கிராமங்களை அவர்களுக்காக மன்றாடினார். ஆனால் துரியோதனன் "பாண்டவர்களுக்கு ஊசிமுனை அளவு இடம்கூட கிடையாது" என மறுத்து விட்டான்.

எனவே, போர் தவிர்க்க முடியாத தாயிற்று. பாண்டவர்களும் கௌரவர் களும் குருக்ஷேத்திரத்தில் போரிட முடிவு செய்தனர். ஏனென்றால் அந்த இடம் பரந்தது, தனிமையானது, நீர் நிறைந்தது, மற்றும் விறகுகளும் மிகுந்தது. பதினெட்டு நாட்கள் நடந்த யுத்தத்தில் பாண்டவர்கள் வெற்றிவாகை சூடினர்.

## பகவத் கீதையின் தோற்றம்

குருக்ஷேத்திரப் போர் மோக்ஷத ஏகாதசி நாளன்று துவங்கியது. அன்றுதான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு பகவத் கீதையை உபதேசித்தார். ஒவ்வொரு வருடமும் அந்நாள், பகவத் கீதை தோன்றிய நாளாக, குருக்ஷேத்திரத்திலும் பாரதத்தின் பல பாகங்களிலும் கொண்டாடப்படுகிறது. கீதை பேசப்பட்ட இடமான ஜோதிஸரில் இது மிகப்பெரிய விழாவாகக் கொண்டா டப்படுகிறது. இச்சமயத்தில் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் (இஸ்கானின்) பக்தர்கள், பிரபுபாதர் புத்தக மாரதான் (தொடர் விநியோகம்) என்னும் பெயரில் வருடந்தோறும் பிரபுபாதரின் புத்தகங்களை பெருமளவில் விநியோகிக்கின்றனர். குறிப்பாக, "பகவத் கீதை உண்மையுருவில்" என்னும் புத்தகத்தினை இலட்சக்கணக்கில் இந்தியா விலும் உலகின் மற்ற பாகங்களிலும் விநியோகிக்கின்றனர்.

## (பூரி ஜகன்னாதர்) ரதயாத்திரையில் குருக்ஷேத்திரத்தின் பங்கு

ஒருமுறை கிருஷ்ணர், சூரிய கிரகணத்தின் போது, குருக்ஷேத்திரம் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார்.

**எதிர்பக்கத்தில்:** பகவான் கிருஷ்ணர் கீதையை பேசிய இடம், இந்த கிருஷ்ண அர்ஜுன ரதம் அதன் நினைவுச் சின்னமாகும்.

**கீழே:** அவ்விடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள குளம்

**வலது:** கீதைக்கு சாட்சியாக விளங்கும் புனித ஆலமரம்








விருந்தாவனத்தில் உள்ள கோபர்களையும் கோபியரையும் தன்னை குருக்ஷேத்திரத்தில் சந்திக்குமாறு அழைப்பு விடுத்தார். இளமையில் (பதினொரு வயதில்) விருந்தாவனத்தை விட்டு மதுரா செல்லும்போது, அவர் விரைவில் திரும்புவதாக வாக்களித்திருந்தார். ஆனால் நீண்ட காலமாகியும், அவர் விருந்தாவனம் திரும்பவில்லை. எனவே, பிரிவினால் ஏற்பட்ட பரவச உணர்வில், அவர் மீதுள்ள ஆழ்ந்த பாசத்தால், அவரை மறுபடியும் காண விருந்தாவனவாசிகள் துடித்துக் கொண்டிருந்தனர்.

செல்வச்செழிப்பு மிக்க துவாரகை நகரவாசிகள் தங்கள் ரதங்களிலும், பசுக்களை பராமரிக்கும் விருந்தாவன கிராமவாசிகள் தங்கள் மாட்டு வண்டிகளிலும் குருக்ஷேத்திரத்தை அடைந்தனர். விருந்தாவனவாசிகளும் துவாரகாவாசிகளும் உறவினர்கள் என்பதால், அச்சந்திப்பு மகிழ்ச்சிகரமாக நடைபெற்றது. விருந்தாவனவாசிகளில் முதன்மை கோபியான ஸ்ரீமதி ராதா ராணியே அனைவரையும் விட கிருஷ்ணரைப் பிரிந்த பிரிவுத்துயரில் மிகவும் ஆழ்ந்திருந்தார். அவரும் மற்ற கோபியரும் கிருஷ்ணரை மீண்டும் விருந்தாவனத்திற்கு அழைத்துச் செல்வதில் உறுதியாக இருந்தனர். அப்போது அவர்களுக்கிடையில் நடந்த உன்னத அன்புப் பரிமாற்றமே பூரி ரதயாத்திரையின் பின்னணியாகும். ஹரே கிருஷ்ண பக்தர்கள், உலகின் பல நகரங்களில் ரதயாத்திரைகளை நடத்தும் போது, அவர்கள் குருக்ஷேத்திரத்தின் பெருமையை எடுத்துரைக்கின்றனர்.

## குருக்ஷேத்திரத்தில் உள்ள புனித ஸ்தலங்கள்

இவ்விடத்தில் ஒன்பது புண்ணிய நதிகளும் ஒன்பது புனித வனங்களும் உள்ளன என்று வாமன புராணம் கூறுகிறது.

### சரஸ்வதி நதி

குருக்ஷேத்திரத்தில் சரஸ்வதி நதியைத் தவிர மற்ற நதிகளின் ஆற்றுப்படுகைகளை காண்பது அரிது. சரஸ்வதி நதி மழை காலங்களில் பாய்ந்தோடுகிறது, ஆனால் மற்ற நேரங்களில் அதன் ஆற்றுப் படுகையை மட்டுமே ஒருவர் காணலாம்.

### ஜோதிஸர்

ஜோதிஸரில் ஓர் ஆலமரத்தின் அடியில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையை உபதேசித்த இடத்தில், பளிங்கினாலான தேர் அமைக்கப்பட்டுள்ளது. அம்மரம் ஐயாயிரம் வருடங்கள் பழமையானது. அதுவே அர்ஜுனனுடன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் நடத்திய அழிவற்ற உரையாடலுக்கு மிகப் பழமையான அத்தாட்சியாகும். குருக்ஷேத்திரத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் சரஸ்வதி நதியின் கரையில் ஜோதிஸர் அமைந்துள்ளது.

### பிரம்ம ஸரோவர்

பிரம்மா இங்குதான் பூமியை படைத்ததாகக் கூறப்படுகிறது. சூரிய கிரஹணத்தின்போது ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் பிரம்ம ஸரோவரில் (குளத்தில்) புனித நீராட தொன்றுதொட்டு வருகின்றனர். இந்த அழகிய பிரம்ம ஸரோவர் அவ்விடத்திலுள்ள மற்ற குளங்களைக் காட்டிலும் பெரியது. குருக்ஷேத்திரத்திற்கு வரும் பயணிகளுக்கு அது முக்கிய இடமாக உள்ளது.

பிரம்ம ஸரோவரின் வடகரையில் இஸ்கான் ஸ்தாபக ஆச்சாரியர் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரின் ஆன்மீக குருவான ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூரால் ஸ்தாபிக்கப்பட்ட கௌடிய மடத்தின் ராதா-கிருஷ்ணர் ஆலயம் அமைந்துள்ளது. ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு ராதையும் கிருஷ்ணரும் மீண்டும் ஒன்றுசேர்ந்த நிகழ்ச்சியை நினைவு கூறும் வகையில் கௌடிய மடத்தினால் இக்கோவில் கட்டப்பட்டது.

### சமந்த பஞ்சகம்

குருக்ஷேத்திரம் சமந்த பஞ்சகம் (ஐந்து நீர்நிலைகள்) என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், பகவான் கிருஷ்ணரின் அவதாரமான பரசுராமர் சத்திரியர்களைக் கொன்று அவர்களுடைய குருதியினால் ஐந்து நீர்நிலைகளை இங்கு உருவாக்கினார். (பரசுராமர் துஷ்ட அரசர்களையும், போர் வீரர்களையும் இருபத்தியோரு முறைகள் அழித்தார்.) குருதியானது பின்பு நீராக மாறியது என ஸ்ரீல பிரபுபாதர் கூறினார்.

### பான கங்கை

பான கங்கை அல்லது பீஷ்ம குண்டம் எனப்படும் புனித ஸ்தலமானது குருக்ஷேத்திரத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ளது. குருக்ஷேத்திரப் போரின் போது



பாண்டவர்களின் பாட்டனாரான பீஷ்ம தேவர் தன் உடலைத் துளைத்த அம்பு களில் படுத்திருந்தார். தனது தாகத்தை தணிக்கும்படி அர்ஜுனனிடம் அவர் கேட்டபோது, மாவீரரான பீஷ்மர் இகவுலக நீரை பருக விரும்பவில்லை என்பது அர்ஜுனனுக்குத் தெரிந்தது. எனவே, அர்ஜுனன் தனது அம்பைக் கொண்டு பூமியை துளையிட்டார். கங்கை நீரானது பீறிட்டது. அர்ஜுனனின் இந்த சிறந்த செயலுக்கு நன்றி கூறிய பீஷ்மர் அப்புனித நீரினைப் பருகினார். பின்னர் பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு தர்ம மார்க்கத்தைப் பற்றி போதித்தார். இங்கு யாத்திரிகர்கள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விஸ்வரூப மூர்த்தியையும், இருபத்தாறு அடி உயரமுள்ள ஹனுமானையும் வழிபடலாம்.

## பான கங்கை (குயல்பூர்)

இது பிரம்ம ஸரோவரிலிருந்து சில மைல்கள் தொலைவில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமமாகும். இங்கு அர்ஜுனன் ஜயத்ரதனைக் கொல்வதற்காக போரிட்ட பொழுது தனது தேர் குதிரைகளுக்கு நீர் வழங்க அம்பினால் பூமியை துளையிட்டு கங்கையை வரவழைத்தார்.



**மேலே:** பீஷ்மருக்காக அர்ஜுனன் கங்கையை வரவழைத்ததன் நினைவுச் சின்னம்

**அதற்கும் மேலே:** பிரம்ம ஸரோவர்

## கர்ணவதம்

கர்ணவதம் என்பது ஒரு நீண்ட பள்ளப் பகுதியாகும். இவ்விடத்தில்தான் கர்ணனுடைய தேர் சக்கரம், அர்ஜுனன் அவனை கொல்லும்முன், சிக்கிக் கொண்டது

## பராசரர்

தானேஸ்வரிலிருந்து தெற்கில் இருபத்தைந்து மைல் தொலைவில் அமைந்துள்ள இவ்விடத்தில் ஸ்ரீல வியாச தேவரின் தந்தையான பராசர முனிவரின் ஆஸ்ரமம் அமைந்திருந்தது. மஹாபாரத போரின் இறுதியில் போர்க்களத்திலிருந்து ஓடிய துரியோதனன் இங்குள்ள ஏரியில் மறைந்திருந்தான். பாண்டவர்கள் சண்டையிட அவனிடம் சவால் விட்டபோது நீரிலிருந்து வெளிவந்தான்.

## பேஹோவா

இது தானேஸ்வருக்கு மேற்கில் பதினேழு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. முன்பு பிரிதுதக், (ப்ரிதுவின் குளம்) என அழைக்கப்பட்டது. கிருஷ்ணரின் சக்தி அவதாரமான மன்னர் பிருது, தனது தந்தையின் இறுதிச் சடங்குகளை இங்கே செய்தார். தினமும் நூற்றுக்கணக்கான யாத் திரிகர்கள் தங்களுடைய முன்னோர்களுக்கு சடங் குகள் செய்ய பேஹோ வாவிற்கு வருகின்றனர்.

## சக்கர வியூகம்

தானேஸ்வரிலிருந்து எட்டு மைல் தொலைவில் அமைந்துள்ள சக்கர வியூகத்தில், படைத் தளபதி துரோணாசாரியார் தனது இராணுவ படையை சக்கர வடிவில் அமைத்தார். இங்குதான் அர்ஜுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்த மகனான அபிமன்யு கொல்லப்பட்டான்.




## குருக்ஷேத்திர புனித யாத்திரை செல்ல...


குருக்ஷேத்திரம் ஹரியானா மாநிலத்தில் அமைந்துள்ளது. டில்லி யிலிருந்து நான்கு மணி நேரம் இரயில் பயணம் செய்து குருக்ஷேத்திரத்தை அடையலாம்.

குருக்ஷேத்திரம் செல்வோர் அங்குள்ள இஸ்கான் ஆலயத்திற்கும் செல்லுதல் நன்று.

பல தர்மசாலைகளும், நவீன வசதிகள் கொண்ட ஹோட்டல்கள் மற்றும் தங்குமிடங்களும் உள்ளன. மேலும் மும்பை, ஆக்ரா, பரோடா, சண்டிகர், சிம்லா போன்ற இடங்களிலிருந்து நேரடி இரயில்கள் இயக்கப்படுகின்றன.

தவத்திரு லோகநாத ஸ்வாமி அவர்கள் ஸ்ரீல பிரபுபாதரின் நேரடி சீடர். இஸ்கான் பக்தர்களுக்கு நன்கு பரிச்சயமான அவர், உலகெங்கிலும் பரவலாக பிரச்சாரம் செய்து கிருஷ்ண பக்தியை பரப்பி வருகிறார்.

(தமிழாக்கம்: விஜய வேங்கடேஷ தாஸ்)





# ஏன்? பகவத் கீதை ‘உண்மையுருவில்’

**பகவத் கீதை என்றவுடன் எனக்குத் தெரியும் என்பவர்களே ஏராளமானோர். ஆனால் அதை வைத்திருப்பவர்கள் சிலரே. அந்த சிலரிலும் அதைப் படிப்பவர்கள் மிகச் சிலரே. அவர்களிலும் அதைப் புரிந்து கொண்டவர்கள் வெகு சிலரே. அதைப் பின்பற்றுவோரோ மிகவும் அரிது. ஏன் இந்த நிலை? மக்களிடையே நிரம்பியுள்ள சந்தேகங்களும் அறியாமையுமே இந்நிலைக்கு காரணம். சந்தேகப்படுபவர்களுக்கு இவ்வுலகும் இல்லை, மறு உலகும் இல்லை என்பதே கீதையின் வாக்கு. அத்தகைய சந்தேகங்களுக்கான தீர்வு இதோ!**

வழங்கியவர்: திரு. சங்கதாரி தாஸ்

## இக்காலத்திற்குப் பொருந்துமா?

கீதையின் கருத்துகள் அந்தக் காலத்திற்கு என்றும், தற்போதைய காலத்திற்குப் பொருந்தாது என்றும் வாதிடுவோர் பலர். ஆனால் உண்மையான (ஸநாதன) தர்மத்தைப் பற்றி கீதை கூறும் கருத்துகள், எல்லா காலத்திற்கும் பொருந்தக்கூடியவை. கீதை காட்டும் யோக முறைகளை இன்றும் நடைமுறையில் பின்பற்ற முடியும், அவை மனிதனைப் பண்படுத்தக்கூடியவை. மேலும், இக்கால வாழ்வின் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் கீதையில் தெளிவான தீர்வு உள்ளது.



இதை வலியுறுத்தும் வண்ணம் காந்தியடிகள், “சந்தேகங்கள் என்னை சூழும்போதும், ஏமாற்றங்கள் என் முகத்தை உற்று நோக்கும்போதும், உடனே கீதையைப் புரட்டி என்னை சாந்தப்படுத்தும் ஒரு ஸ்லோகத்தைக் காண்பதுண்டு. உடனே துன்பங்களுக்கு மத்தியிலும் புன்னகைக்கத் தொடங்குவேன். கீதையை தீவிரமாக சிந்திப்பவர்கள் தினந்தோறும் புத்தம் புது மகிழ்ச்சியையும், புது அர்த்தங்களையும் பெறுவர்” என்று கூறியுள்ளார். கீதையானது அன்றும் இன்றும் என்றும் எல்லாருக்கும் வழிகாட்டும் வாழ்க்கை நூலாகும்.

## வயதானவர்களுக்கு மட்டுமா?

ஆன்மீகம் என்றாலே அறுபது வயதுக்கு மேல் என்று தள்ளிப்போடும் மக்கள், பகவத் கீதையை இளம் வயதில் படிப்பதை தவிர்க்கின்றனர். ஆனால், அடுத்த கணம் நாம் இருப்போமா என்பதை யாராலும் உறுதியளிக்க முடியாத நிலையில், மறுவாழ்விற்கு வளமூட்டும் பகவத் கீதையை, வயதான பிறகு படிக்கலாம் என்றுத் தள்ளிப் போடுவது முழு பைத்தியகாரத்தனம் அல்லவா! ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது என்பதற்கேற்ப, இளம் வயதில் கீதையை படிக்கும் தெளிவு முதுமையில் கிட்டுமா என்பது ஐயமே! மாமன்னர் குலசேகராழ்வார், ‘‘ஓ கிருஷ்ணா! இப்போதே எனது எண்ணங்கள் தாமரை மலர் போன்ற உமது பாத கமலங்களில் சரணடையட்டும். ஏனெனில், சளி, பித்தம் போன்ற பிணியால் அவதியுற்று, இறக்கும் தருவாயில் உம்மை நினைக்கும் வாய்ப்பு எனக்கு எப்படிக் கிட்டும்?’’ என்று கூறி ‘‘அப்போதைக்கு இப்பவே சொல்லி வைக்கிறேன்’’ என்று வயதான காலத்திற்கும் சேர்த்து இப்போதே ஆன்மீக சாதனைகளை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.




## சந்நியாசி ஆகி விடுவார்களா?



பகவத் கீதை சந்நியாசிகளுக்கு மட்டும்தான் என்றும் கீதையைப் படித்தால் குடும்ப வாழ்வைத் துறக்க வேண்டும் என்றும் கூறி ஏராளமானோர் பகவத் கீதையை ஒதுக்கி வைக்கின்றனர். ஆனால் சந்நியாசம் எடுக்க விரும்பிய அர்ஜுனன், கீதையை கேட்ட பின் சந்நியாசி ஆகவில்லை; மாறாக குடும்ப வாழ்வில் இருந்த வண்ணமே தனக்குரிய கடமைகளைச் சரியாக செய்ய முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினார். எனவே, பகவத் கீதை, குடும்ப வாழ்வைத் துறப்பதற்காக உபதேசிக்கப்பட்டதல்ல; மாறாக, ஒவ்வொருவரும், குடும்பத்தில் இருந்தாலும் சரி, சந்நியாசத்தில் இருந்தாலும் சரி, தங்கள் நிலையில் இருந்த வண்ணம் எப்படி தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ள முடியும் என்பதைக் கற்றுக் கொடுப்பதற்காக ஏற்பட்டதாகும்.

## இந்துக்களுக்கு மட்டும்தானா?



கீதையானது "இந்துக்களுக்கு மட்டும்தான்" என்றும், அதிலும் "ஆண்கள் மட்டும் படித்தால் போதும்" என்றும் நினைப்பவர்கள் ஏராளம். ஆனால் உண்மை அதுவல்ல. அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் (இஸ்கான்) ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதரினால் உரை எழுதப் பட்டு பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையினால் வெளியிடப்படும் "பகவத் கீதை உண்மையுருவில்" என்ற நூலை ஜாதி மத வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினரும்—பல்லாயிரக்கணக்கான கிறிஸ்துவர்கள், முகம்மதியர்கள், யூதர்கள், பௌத்தர்கள், சமணர்கள் என அனைவரும்—படித்துப் பயன்பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் இந்நூலைப் படித்து பக்குவம் பெற்றுள்ளனர். இந்த உபதேசங்கள், குறிப்பிட்ட ஜாதியினருக்கு மட்டும்தான் அல்லது குறிப்பிட்ட மதத்தினருக்கு மட்டும்தான் என்று பகவத் கீதையின் எந்த ஓர் இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

## சமஸ்கிருதம் படித்தவர்களுக்கு மட்டும்தானா?



கீதையானது தற்போது எல்லா மொழிகளிலும் கிடைக்கிறது. குறிப்பாக "பகவத் கீதை உண்மையுருவில்" மிகவும் எளிய நடையில் தமிழ், ஆங்கிலம் உட்பட 56க்கும் மேற்பட்ட மொழிகளில் கிடைக்கிறது. எனவே சமஸ்கிருதம் தெரியாதவர்களும்கூட எளிதில் படித்துத் தெரிந்துகொள்ளலாம். அப்படியும் கீதை புரியவில்லை என்றால் அதற்கு காரணம் மொழியல்ல, நம் மனதே. ஆம். கலங்கிய நீரில் முகம் காண இயலாததுபோல, குழம்பிய மனதில் கீதையை புரிந்துகொள்ள இயலாது. இதனை சரிசெய்ய "பகவத் கீதை உண்மையுருவில்" நூலில் வழிகாட்டுதல்கள் உள்ளன. இஸ்கான் கோயில்களில் கீதையை நன்கு புரிந்துகொள்வதற்கான விளக்க வகுப்புகள் நடைபெறுகின்றன. எனவே, கீதையை படிக்க மொழி ஒரு தடையல்ல.

## கீதையைப் படிப்பது கால விரயமா?

கீதையை படிக்க நேரமில்லை என்பவர்கள் சற்று சிந்திக்க வேண்டும். டிவி, சினிமா, பத்திரிகைகள், நாவல்கள், வெட்டிப் பேச்சு, வீண் வாதங்கள் போன்றவற்றில் வீணடிக்கும் நேரத்தில், ஒரு சில மணி நேரங்களை ஒதுக்கினால் போதும் கீதையை படிக்க. எனவே, கீதையை படிக்க நேரம் இல்லாமல் இல்லை, உண்மையில் மனம்தான் இல்லை. மேலும், கால விரயம் என்றும் தட்டிக்கழிக்கின்றனர். இப்படி நேரம் இல்லை என்பவர்கள், காலன் வெகு தூரத்தில் இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இளம் வயதில், முதுமைக்காக சொத்து சுகங்களை சேர்க்கும் அதே சமயம், இவ்வாழ்விற்கும் அடுத்த வாழ்விற்கும் உதவிடும் நிரந்தர சொத்தான பகவத் கீதையை கவனத்தில் கொள்வது கால விரயமா?

## சோறு போடுமா?



கீதை நமக்கு சோறு போடுமா என்று கேட்பவர்களும் உண்டு. எறும்பில் இருந்து யானை வரைக்கும் உணவளிக்கும் இறைவன், மனிதனுக்கு மட்டும் உணவளிக்க மறந்துவிடுவாரா? கோடி பணம் கொண்டிருந்தாலும், இறைவனின் கருணை இல்லாவிட்டால் ஒரு கவளம் உணவுகூட கிடைக்காது, அவ்வாறு கிடைத்தாலும் அஃது உள்ளே போகும் பாக்கியம் கிடைக்காது. உண்மையில்

இவ்வுடல் இருக்கும் மட்டும்தானே சோறு தேவை. இவ்வுடல் போன பின் என்ன தேவை என்பதை உணரும் புத்தியுள்ள மனிதர்கள், அதற்கான விடையை பகவத் கீதையிலிருந்து அறிந்துகொள்வர்.

## கும்பிட்டால் மட்டும் போதுமா?



அனைவருக்கும் அவசியமான பகவத் கீதைக்கு ஒரு கும்பிடு மட்டும் போட்டால் போதாது. அதனை வாங்கிப் படிக்க முயற்சிக்க வேண்டும். படித்துப் புரிந்துகொள்ள வேண்டும், புரிந்து அதன்படி நடப்பதும் அவசியம்.

## சண்டை வருமா?

கீதையைப் படித்தாலோ கீதை வீட்டில் இருந்தாலோ வீட்டில் சண்டை வரும் என்று முட்டாள்தனமாக எவ்வித காரணமும் இன்றி நினைப்பவர்கள் பலர். உண்மையில், கீதை இருக்கும் இடத்தில், நீதி, வெற்றி, செல்வம், வலிமை ஆகியவை ஒருங்கே இணைந்திருக்கும் என்பது கீதையின் வாக்கு (18.78). போரில் எதிரியை வென்று பதக்கம் பெற்ற வீரனை யாரும் குறை கூறுவது இல்லை. ஏனென்றால் அவர் நீதியை நிலைநாட்டுகின்றார். அவ்வாறே பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக உபதேசம் செய்த கீதையை சண்டை வரக் காரணம் ஆகும் எனக் குறை கூறுவது எள்ளளவும் பொருந்தாது.

## கீதை ஜாதி நூலா?

பகவத் கீதை ஜாதியை வளர்க்கும் நூல் என்று குறை கூறுபவர்கள், ஜாதி என்றால் என்ன என்று அறியாதவர்கள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையில் (4.13) கூறுகிறார்: *சாதுர்-வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண-கர்ம-விபாகஷ:* ''சமுதாயத்தின் நான்கு பிரிவுகள், குணத்தையும் செயல்களையும் பொறுத்தது.'' அதாவது, ஜாதி என்பது பிறப்பினால் அல்ல. இதனைப் புரிந்து கொண்டால், கிருஷ்ணரால் சுட்டிக்காட்டப்படும் பிரிவுகளுக்கும் நவீன கால ஜாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை உணரலாம்.

இன்றும்கூட, ஒவ்வொரு அரசாங்க அலுவலகங்களிலும் "கலெக்டர், கமிஷனர்" என்ற உயர் பிரிவினரும், "உதவி கலெக்டர், உதவி கமிஷனர்" போன்ற அடுத்த பிரிவினரும், " எழுத்தர், தலைமை எழுத்தர்" போன்ற மூன்றாம் பிரிவினரும், "பியூன், வாட்ச்மேன், சுத்தம் செய்பவர்" போன்ற நான்காம் பிரிவான கடைநிலை ஊழியரும், அவரவர் செய்யும் செயலுக்கேற்ப பிரிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பிரிப்பதால் அரசாங்கம் பிரிவுகளை (ஜாதியை) ஆதரிக்கின்றது என்று அர்த்தமல்ல.

ஏன் இறை நம்பிக்கை இல்லாத நாத்திகர்களிடமும் கூட இப்பிரிவுகள் இருக்கத்தான் செய்கிறது. நாத்திகக் கொள்கைகளை உருவாக்கும் உயர் பிரிவினரும், அதனை போதிக்கும் இரண்டாம் பிரிவினரும், இவற்றிற்காக பொருள் சேகரிக்கும் மூன்றாம் பிரிவினரும், இவை மூன்றும் நடைபெற உழைக்கும் நான்காம் பிரிவினரும் உண்டு தானே?

ஓர் உடலில் எவ்வாறு, தலை, கைகள், வயிறு, கால்கள் என்று ஒவ்வொரு அங்கமும், உடலின் ஒருங்கிணைந்த இயக்கத்திற்கு அவசியமோ, அவ்வாறே, மக்களின் குணத்திற்கும் செயல் திறனுக்கும் ஏற்ப பிரிக்கப்படும் பிரிவுகள், சமுதாயத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் அவசியமானவை.

இவ்வாறு, குணத்தையும் செயலையும் அடிப்படையாகக் கொண்ட பிரிவு முறையே கீதையில் கூறப்பட்டுள்ளது; பிறப்பின் அடிப்படையிலான ஜாதி முறை அல்ல.

## எவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும்?

பகவத் கீதைக்கு பலவிதமான உரைகள் வெளியாகியுள்ளன. இதில் எது உண்மையானது என்பதை உறுதி செய்ய வேண்டும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட மருந்தை நாம் உட்கொள்ள விரும்பினால், அந்த மருந்தின் தலைப்புக் காகிதத்தில் உள்ள விதிகளை பின்பற்ற வேண்டும். நண்பர் கூறுவதுபோலவோ நமக்குத் தோன்றியபடியோ நாம் மருந்து உண்ண முடியாது. மருத்துவரின் அறிவுரைப்படியோ தலைப்புக் காகிதத்தின் மேல் கூறப்பட்டுள்ளபடியோ மருந்தை



உட்கொண்டால் மட்டுமே நோய் குணமடையும். அதே போல் பகவத் கீதையின் உண்மையான நோக்கத்தை அடைய விரும்புபவர்கள் கீதையை உபதேசித்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் வழிகாட்டுதலின்படியே கீதையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இது குறித்து கீதையிலேயே (4.2) ஸ்ரீ கிருஷ்ணர் வலியுறுத்துகிறார், *ஏவம் பரம்பரா ப்ராப்தம் இமம் ராஜர்ஷயோ விது:*, பகவத் கீதையினை அதிகாரப்பூர்வமான குரு-சீடப் பரம்பரை யிலிருந்து பெற வேண்டும். ஏனெனில், மனம் போன போக்கில் தகுதியில்லாத நபர்களால் எழுதப்படும் கீதையின் உரைகள், கீதையின் உண்மையான நோக்கத்தை சிதறடித்து விடும், அபாயகரமான சூழ்நிலைக்கு படிப்பவரை அழைத்துச் செல்லும்.

## கீதையை எவ்வாறு படித்துப் புரிந்துகொள்வது?

பகவத் கீதையில் பகவான், *பக்த்யா மாம் அபிஜானாதி* என்கிறார். அதாவது, பக்தியால் மட்டுமே என்னைப் புரிந்துகொள்ள முடியும் என்கிறார். கீதையைப் புரிந்துகொள்ள எளிமை யான வழி கீதையை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு நமது மனதை பக்குவப் படுத்துவதே. குழம்பிய மனதில் கீதை புரிவதில்லை. ஆனால், ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்ற மஹாமந்திரத்தை உச்சரிப்பதால் மனக் குழப்பம் நீங்கி கீதை புரிய ஆரம்பிக்கிறது.

ஆகையால், தினசரி கீதையைப் படிக்கும் முன் குறைந்தபட்சம் 108 முறை இந்த ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை உச்சரித்தால் படிப்படியாக கீதையை புரிந்துகொள்ள முடியும்.

அதிகாரப்பூர்வமற்ற நபர்களின் கீதை உரை, நிச்சயமாகப் புரியாது, அல்லது நம்மை வழி தவறி இட்டுச் செல்லும். எனவே, அதிகாரப்பூர்வமான ஆச்சாரியர்களால் உள்ளது உள்ளபடி வழங்கப்படும் பகவத் கீதை உரை, சரியான வழிகாட்டியாகவும் மனதிற்குப் புரியும் வகையிலும் அமையும்.

## குரு-சீடப் பரம்பரையில் வரும் "பகவத் கீதை உண்மையுருவில்"

அதிகாரப்பூர்வமான குரு-சீடப் பரம்பரை என்பது, ஆதி குருவான ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து தொடங்கி முறையான ஆன்மீக ஆச்சாரியர்களின் வழியாக வரும் பரம்பரையாகும். 'பகவத் கீதை உண்மையுருவில்' என்னும் உலகப் புகழ் பெற்ற நூலின் ஆசிரியரான தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து தொடங்கி, பிரம்மா, நாரதர், வியாசர், மத்வாசாரியர் வழியாக வந்த அதிகாரப்பூர்வமான குரு-சீடப் பரம்பரையில் வந்த முப்பத்திரண்டாவது குரு ஆவார். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எவ்வாறு உபதேசித்தாரோ, அர்ஜுனன் எவ்வாறு புரிந்து கொண்டானோ, அவ்வாறே உள்ளது உள்ளபடி கீதையின் பொருளைச் சிதைக்காமல் ஸ்ரீல பிரபுபாதர் அளித்துள்ளார். இதுவே அதிகாரப்பூர்வமான ஆச்சாரியர்கள் அளிக்கக்கூடிய உரையின் சிறப்பாகும்.



## பகவத் கீதை உண்மையுருவில் - நூலை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

(1) பகவத் கீதையின் 700 ஸ்லோகங்களும் அடங்கிய முழு பதிப்பு. (2)அதிகாரப்பூர்வமான குரு பரம்பரையில் வந்த 32வது ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் விளக்கமளிக்கப்பட்ட நூல். (3) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியவற்றை உள்ளது உள்ளபடி எவ்வித கலப்படமும் இன்றி வழங்கும் ஒரே நூல். (4) உருது, அரபிக் உட்பட 56க்கும் மேற்பட்ட உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பகவத் கீதையின் ஒரே விளக்கவுரை. (5) பல்வேறு மேலைநாட்டு பல்கலைக்கழகங்கள் பாடநூலாக அங்கீகரித்துள்ள பகவத் கீதையின் ஒரே விளக்கவுரை. (6) உலகம் முழுவதும் ஏழு கோடிக்கு மேல் விற்பனை செய்யப்பட்டுள்ள பகவத் கீதையின் ஒரே விளக்கவுரை. (7) ஒவ்வொரு ஸ்லோகமும், அதன் சமஸ்கிருத வடிவம், எழுத்துப்பெயர்ப்பு, வார்த்தைக்கு வார்த்தை தமிழ் அர்த்தம், எளிய மொழிபெயர்ப்பு, தெளிவான விளக்கவுரை ஆகியவற்றுடன் செம்மையாக விளக்கப்பட்டுள்ளது. (8) இதன் விளக்கவுரைகள், வேதங்கள், உபநிஷத்துகள், புராணங்கள் என பல்வேறு சாஸ்திர மேற்கோள்களுடன் வழங்கப்பட்டுள்ளது. (9) பகவத் கீதையை எளிதாக புரிந்துகொள்ளும் விதத்தில் அழகிய வண்ணப் படங்களுடன் அமைந்துள்ளது. (10) எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் இதற்காக கொடுக்கும் நன்கொடை முழுவதும் ஸ்ரீ கிருஷ்ணரின் திருக்கோயில் தொண்டிற்காக பயன்படுகிறது.

*திரு. சங்கதாரி தாஸ் அவர்கள், இஸ்கான் மதுரை, திருநெல்வேலி கிளைகளில் கடந்த 20 வருடங்களாக முழுநேர சேவை செய்து வருகின்றார்.*

# பகவத் கீதையைப் புரிந்துகொள்ளுதல்

**12 செப்டம்பர் 1973ல், லண்டன் நகரில், தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் சில பத்திரிகை நிருபர்களுக்கும் இடையில் நடந்த உரையாடலின் ஒரு பகுதி.**

**நிருபர்:** பகவத் கீதையில் போதிக்கப்படும் மையக் கருத்து என்ன?

**ஸ்ரீல பிரபுபாதர்:** பகவானைப் புரிந்து கொள்வதே மையக் கருத்தாகும். மக்கள் மூடர்களாகி விட்டார்கள். அவர்கள் பகவானைப் பற்றி தெரிந்து கொள்வதையும், தான் யார் என்பதை தெரிந்துகொள்வதையும் மறந்துவிட்டனர். ஒவ்வொருவரும் "நான் இந்த உடல்" என்று தவறாக எண்ணுகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஆன்மீக ஆத்மாக்கள். ஆத்மாவை அறிவதற்கான கல்வியறிவு அவர்களிடம் இல்லை. அனைவரும் அறியாமையில் உள்ளனர், மிகப்பெரிய பேராசிரியர்கள்கூட அறியாமையில் உள்ளனர். "இந்த உடல் முடிந்த பிறகு, எல்லாமே முடிந்து விடும்" என்று ரஷ்யாவின் பேராசிரியர் கோட்டாவ்ஸ்கி என்னிடம் கூறினார். ஆனால் அஃது உண்மை அல்ல.

**நிருபர்:** ஸ்ரீ கிருஷ்ணர் யார் என்பதை எனக்குக் கூற முடியுமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** நன்று, கிருஷ்ணரே முழுமுதற் கடவுள், பரம புருஷ பகவான்.

**நிருபர்:** அவரை அறிந்து கொள்வதால் நமக்கென்ன இலாபம்?


**ஸ்ரீல பிரபுபாதர்:** பௌதிக வாழ்விலிருந்து நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள். அதுவே இலாபம். பௌதிக வாழ்வு என்றால் பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் ஆகியவற்றின் சுழற்சி.

**நிருபர்:** நம்மிடம் அவர் எப்படி பேசுவார்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** அவர் 5000 வருடங்களுக்கு முன் இந்த உலகத்தில் தோன்றி பகவத் கீதையை உபதேசித்தார். அது பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நிருபர்:** தாங்கள் "பகவத் கீதை உண்மையுருவில்" எழுதியதற்கான காரணம்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** உண்மையுருவில்; ஏனெனில், தேவையில்லாமல் பகவத்



கீதையை திரித்துக் கூறும் முட்டாள்களும் அயோக்கியர்களும் பலர் உள்ளனர். உதாரணமாக, குருக்ஷேத்திரம் என்பதை எடுத்துக் கொள்வோம். குருக்ஷேத்திரம் என்பது இந்தியாவில் உள்ள ஓர் இடம். அந்த குருக்ஷேத்திரம், பகவத் கீதையில், *தர்ம-க்ஷேத்ரே குரு-க்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ:* (பகவத் கீதை 1.1), அதாவது, குருக்ஷேத்திரம் தர்மம் சம்பந்தபட்ட இடம் என்றும், பாண்டவர்களும் கௌரவர்களும் போர் புரிவதற்காக அங்கு ஒன்று கூடினர் என்றும் விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பெயரளவிலான தலைவர்கள், பண்டிதர்கள், அரசியல்வாதிகள், ''குருக்ஷேத்திரம் என்பது உடலைக் குறிக்கிறது'' என்று தவறான அர்த்தத்தைக் கற்பிக்கின்றனர்.

**நிருபர்:** எனக்கு ஜெபத்தைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள். உங்களைப் பின்பற்றுபவர்கள் ஏன் ஜெபம் செய்து கொண்டிருக்கிறார்கள்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே. இஃது உன்னதமான ஒலியதிர்வு, தெய்வீக சப்தம். இதை ஜபம் செய்வதன் மூலம், மூடர்களின் அறியாமை நாளடைவில் நீங்கிவிடும். உண்மை அறிவிற்கு வருவீர்கள். நீங்கள் தூய்மையடைவீர்கள். இந்தியாவில் ஏராளமான பாம்பாட்டிகள் இன்றும் உள்ளனர். அவர்கள் மந்திரத்தின் மூலம் பாம்பின் விஷத்தை வெளியேற்றுகின்றனர். பௌதிகமாக அது சாத்தியம் என்றால், ஆன்மீகத்தில் இஃது இன்னும் எளிமையானதாகும்.

**நிருபர்:** கிருஷ்ண பக்தியைப் பற்றி சிறிது கூறுங்களேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** பகவத் கீதையை உள்ளது உள்ளபடி பின்பற்றுவதே கிருஷ்ண பக்தி. பகவத் கீதையை ஸ்ரீ கிருஷ்ணர் 5000 வருடங்களுக்கு முன் கூறினார். அதையே நாங்கள் அப்படியே பிரச்சாரம் செய்கிறோம். பகவத் கீதையில் கிருஷ்ணர் முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார். அதனால் நாங்களும், ஸ்ரீ கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்று பிரச்சாரம் செய்கிறோம்.

**நிருபர்:** கிருஷ்ண பக்தி உண்மையானதா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** அப்படியெனில், நாங்கள் எங்களது நேரத்தை வீணடிக்கின்றோம் என்று நினைக்கிறீர்களா? நாங்கள் என்ன முட்டாள்களா? இப்படி முட்டாள் தனமான கேள்வியை ஏன் கேட்கிறீர்கள்? 'உண்மையானதா?' இஃது உண்மையல்ல எனில், நாங்கள் ஏன் இவ்வளவு கடினமாக உழைக்கிறோம்?

**நிருபர்:** இஃது இளைஞர்களிடம் மிகவும் புகழ் பெற்றுள்ளது ஏன்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஏனெனில், அவர்களிடம் அறிவு உள்ளது. அதனால் அவர்கள் இதனை வரவேற்கின்றனர். இளமைப் பருவத்தில்தான் கல்வியறிவு கொடுக்கப்படுகிறது, முதுமையில் அல்ல. வயதானவர்கள் கல்வி கற்க முடியாது, அவன் ஏற்கனவே அறிந்துள்ள அபத்தங்களை மறப்பதற்கே அவனுக்கு இன்னும் ஐம்பது வருடங்கள் ஆகும். சில சமயங்களில், அவர்கள் ''வயதான முட்டாள்கள்'' என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால் இளைஞர்களோ இதில் ஏதோ உள்ளது என்று புரிந்து கொள்கிறார்கள், அவர்களிடம் மூளை இருக்கிறது.

**நிருபர்:** மிகவும் நன்றி, நான் தங்களுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நன்றி

## நற்தொண்டு புரியும் இஸ்கான்—ஜனாதிபதி பாராட்டு



இஸ்கானின் மூத்த சந்நியாசிகளில் ஒருவரான தவத்திரு கோபால கிருஷ்ண கோஸ்வாமி அவர்களும் தேசிய தகவல் தொடர்புத் துறையின் இயக்குனரான திரு. விரஜேந்திர நந்தன தாஸரும், இந்திய ஜனாதிபதி ஸ்ரீமதி பிரதீபா தேவசிங் பட்டேல் அவர்களை ஆகஸ்ட் 20ல் ராஷ்டிரபதி பவனில் சந்தித்தனர். மரியாதை நிமித்தமாக நடந்த அந்த சந்திப்பில் ஸ்ரீ ஸ்ரீ ராதா பார்த்தசாரதியின் மலர் மாலை மற்றும் பிரசாதத்துடன் ஜனாதிபதிக்கு ஆசி வழங்கிய மஹாராஜ், தரிசனம் என்னும் புத்தகத்தையும் பரிசாக வழங்கினார். இதற்கு முன் மும்பை ஜுஹு கடற்கரையில் உள்ள இஸ்கான் கோவிலுக்கு தான் சென்றதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, உலகெங்கிலும் நடைபெறும் இஸ்கானின் செயல்பாடுகளை கேட்டறிந்து மகிழ்ச்சியுற்றார். இஸ்கான் செய்யும் உயர்ந்த நலத் தொண்டுகளுக்காக ஜனாதிபதி மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

# பக்திப் பரவசத்தை நல்கும் ஸ்ரீமத் பாகவதம்

பக்தித் தொண்டின் அறுபத்தி நான்கு அங்கங்களை ஸ்ரீல ரூப கோஸ்வாமி அவர்கள் தனது படைப்பான பக்தி ரஸாம்ருத சிந்துவில் குறிப்பிட்டுள்ளார், அவற்றிலுள்ள ஐந்து அங்கங்கள் (திருநாம உச்சாடனம், ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல், வைஷ்ணவர்களின் சங்கம், விக்ரஹ ஆராதனை, புனித ஸ்தலங்களில் வசித்தல் ஆகியவை) மிகவும் சக்தி வாய்ந்தவை என்றும், அவற்றின் மீதான ஓரளவு பற்றுதலும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சென்ற இதழில், திருநாம உச்சாடனத்தைப் பற்றி கண்டோம். தற்போது, ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல் என்பது பற்றி காண்போம்.

வழங்கியவர்: திரு. ஜெய கோபிநாத தாஸ்

### ஸ்ரீமத் பாகவதம் என்றால் என்ன?

ஸ்ரீமத் என்றால் மிக அழகானது, அல்லது மிகச் சிறந்தது, அல்லது புகழ் வாய்ந்தது என்று பொருள். பாகவதம் என்றால் பகவானிடமிருந்து வருவது அல்லது பகவானுடன் தொடர்புடையது என்று பொருள். எனவே, ஸ்ரீமத் பாகவதம் என்பது "பகவானைப் பற்றிய அழகான புத்தகம்" என்று பொருள்படும். இது வேத வியாசர் இயற்றிய பதினெட்டு புராணங்களில் ஒன்றாகும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், அவரது பல்வேறு அவதாரங்கள், மற்றும் அவரது பக்தர்களைப் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகள் இதில் அடங்கியுள்ளன. ஸ்ரீமத் பாகவதமானது வேத மெய்யறிவை நல்கும் கற்பக மரம்.

### ஸ்ரீ கிருஷ்ணரின் அவதாரமே ஸ்ரீமத் பாகவதம்

ஒரு கல்லிலோ பளிங்கிலோ பகவான் அவதரிக்கும்போது, அவரை விக்ரஹம் என்கிறோம். அவர் மீனாகத் தோன்றினால் மத்சயர் என்றும், ஆமையாகத் தோன்றினால் கூர்மர் என்றும், பாதி மனிதனாகவும் பாதி சிங்கமாகவும் தோன்றினால் நரசிம்மர் என்றும் அழைக்கின்றோம். அதுபோலவே, புத்தகத்தின் வடிவில் கிருஷ்ணர் தோன்றினால், அவர் ஸ்ரீமத் பாகவதம் என்று அறியப்படுகிறார்.



## ஸ்ரீமத் பாகவதம் தோன்றிய விதம்

நான்கு வேதங்கள், வேதாந்த சூத்திரம், புராணங்கள், மகாபாரதம் போன்றவற்றை தொகுத்து வழங்கிய மாமுனிவரான ஸ்ரீல வியாசதேவரின் மனம், அவ்வாறு தொகுத்த பின்னும் திருப்தியடையவில்லை. அந்நிலைக்கான காரணத்தை அவர் தனது ஆன்மீக குருவான ஸ்ரீல நாரதரிடம் கேட்டார். அதற்கு நாரதர், “உண்மையில், முழுமுதற் கடவுளின் களங்கமற்ற புகழை நீ வர்ணிக்கவில்லை. பகவானின் தெய்வீகப் புலன்களைத் திருப்தி செய்யாத தத்துவங்கள் பயனற்றவை. அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை விவரமாக விளக்கியுள்ள போதிலும், முழுமுதற் கடவுளான வாசுதேவரின் (கிருஷ்ணரின்) புகழை நீ விளக்கவில்லை. அந்த முழுமுதற் கடவுளின் சேவையில் நமது எல்லா செயல்களையும் அர்ப்பணிப்பதால் மட்டுமே நமது அனைத்து துயரங்களையும் போக்க முடியும். ஆகையால் தயவுசெய்து நீ பகவானின் லீலைகளைப் பற்றி நேரடியாக வர்ணிப்பாயாக. அதுவே கற்றறிந்தவர்களின் ஏக்கத்தை திருப்தி செய்ய வல்லது” என்று வியாசருக்கு உபதேசித்தார்.

இவ்வாறாக, ஞானத்தின் முதிர்ந்த நிலையில், தனது குருவான நாரதரின் கட்டளைப்படி, வியாசதேவர், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளை ஸ்ரீமத் பாகவதத்தின் வடிவில் நமக்கு அருளினார்.

இந்த ஸ்ரீமத் பாகவதமும் ஸ்ரீமத் பகவத் கீதையைப் போன்றே கேள்வி பதிலின் வடிவில் அமைந்துள்ளது. கலி யுகத்தின் தீய விளைவுகளிலிருந்து விடுபடுவதற்கான மார்க்கத்தை அறிய நைமிசாரண்யத்தில் கூடிய முனிவர்கள், ஸ்ரீல சூத கோஸ்வாமியிடம் கேட்ட கேள்விகளுக்கு அவரளித்த பதில்களின் வடிவில் இஃது அமைந்துள்ளது. ஸ்ரீல சூத கோஸ்வாமியோ, பரிக்ஷித் மன்னரின் கேள்விகளுக்கு ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமி எவ்வாறு பதிலளித்தாரோ, அதை அப்படியே நைமிசாரண்யத்தின் முனிவர்களிடம் விவரித்தார்.

## போலி தர்மங்களுக்கு இடமில்லை

பக்தி யோகத்தை மட்டுமே வலியுறுத்தும் ஸ்ரீமத் பாகவதம், மற்ற எல்லா தர்மங்களையும் நிராகரிக்கும்படி பரிந்துரை செய்கின்றது. பகவத் கீதையின் இறுதி அத்தியாயத்தில், எல்லா தர்மங்களையும் கைவிட்டு தன்னை மட்டுமே சரணடையுமாறு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் நம்மை அறிவுறுத்துகிறார். ஆனால் ஸ்ரீமத் பாகவதமோ, அதன் இரண்டாம் ஸ்லோகத்திலேயே எல்லா விதமான போலி தர்மங்களையும் நிராகரிக்கும்படி வலியுறுத்துகின்றது (தர்ம: ப்ரோஜ்ஜித-கைதவோ (அ)த்ர பரமோ நிர்மத்ஸரணாம் ஸதாம் 1.1.2). எனவே, பகவத் கீதை எதில் முடிகின்றதோ, அதிலிருந்து ஸ்ரீமத் பாகவதம் தொடங்குகின்றது.

## வேத ஞானத்தின் சாரம்

ஒரு மரத்தின் சிறப்பு அதன் பழத்திலிருந்து தெரிய வரும். அந்த பழம் ஒரு கிளியின் அலகினால் கொத்தப்பட்டிருந்தால், அது மிகவும் தித்திப்பாகவும் சுவையாகவும் இருக்கும். இக்கருத்து ஸ்ரீமத் பாகவதத்தில் (1.1.3) பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:

*நிகம-கல்ப-தரோர் கலிதம் பலம்*
*ஷுக-முகாத் அம்ருத-த்ரவ-ஸம்யுதம்*
*பிபத பாகவதம் ரஸம் ஆலயம்*
*முஹுர் அஹோ ரஸிகா புவி பாவுகா:*

ஸ்ரீமத் பாகவதம், வேத சாஸ்திரங்கள் என்னும் கற்பக மரத்தின் கனிந்த பழமாகும். முக்தியடைந்த



ஆத்மாக்கள் உட்பட அனைவராலும் சுவைக்கப்படுவதற்கு உகந்த நிலையில் இருந்த இதன் அமிர்த ரஸம், சுகதேவரின் ('சுக' என்றால் 'கிளி' என்று பொருள்) உதடுகளிலிருந்து வெளிப்பட்டதால், மேலும் அதிகமான சுவையுடன் திகழ்கின்றது.

பல வகையான சாஸ்திரங்கள் உள்ளன. அவற்றில் பலவிதமான கடமைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றை பல்வேறு ஆண்டுகள் படித்த பிறகே கற்றுக்கொள்ள முடியும். எனவே, இவ்வெல்லா சாஸ்திரங்களின் சாரத்தை தேர்ந்தெடுத்து அனைத்து ஜீவராசிகளின் நன்மைக்காக விளக்குமாறு சூத கோஸ்வாமியிடம் நைமிசாரண்யத்தில் கூடியிருந்த முனிவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

"எல்லா வேத சாஸ்திரங்களிலிருந்தும் இதிகாசங்களிலிருந்தும் சாரத்தை எடுத்த வியாசதேவர், தன்னுணர்வு பெற்றவர்களில் அதிகமாக மதிக்கப்படும் தனது மகனான சுகதேவருக்கு, அந்த சாரமான ஸ்ரீமத் பாகவதத்தை கொடுத்தார்" என்று ஸ்ரீல சூத கோஸ்வாமி அவர்களுக்கு பதிலளித்தார். (பாகவதம் 1.3.41)

எனவே, எல்லா வேதங்கள் மற்றும் புராணங்களின் சாரமே ஸ்ரீமத் பாகவதம்.

## கலி யுக மக்கள் ஒளி பெற

பரம்பொருளான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தன்னுடைய இருப்பிடத்திற்கு (ஆன்மீக உலகிற்குத்) திரும்பி சென்ற பின், மதக் கொள்கைகள் அனைத்தும் ஸ்ரீமத் பாகவதத்திடம் தஞ்சமடைந்துள்ளன. ஸ்ரீமத் பாகவதம், சூரியனைப் போன்று பிரகாசமானது, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தனது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றபின் இஃது உதித்துள்ளது. அறியாமை என்னும் அடர்ந்த இருட்டில் பார்வையை இழந்த கலி யுக மக்கள் இப்புராணத்திலிருந்து ஒளி பெற இயலும். இந்த ஸ்ரீமத் பாகவதம், ஒட்டுமொத்த மனித சமுதாயத்தில் ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடியதாகும்.

## பூரண விடுதலையை நல்கும்

களங்கமற்ற (அமல) புராணமான ஸ்ரீமத் பாகவதம் வைஷ்ணவர்களுக்கு மிகவும் பிரியமானது. ஏனென்றால், இது மிகவுயர்ந்த தூய ஞானத்தை விளக்குகிறது; தெய்வீக ஞானம், துறவு, பக்தி ஆகியவற்றின் செயல்முறைகளை விளக்கி, பௌதிக செயல்களின் பந்தத்திலிருந்து விடுதலையடைய வழி வகுக்கின்றது. யாரொருவர் இந்த ஸ்ரீமத் பாகவதத்தை புரிந்துகொள்ள தீவிர முயற்சி செய்கின்றனரோ, முறையாக கேட்டு பக்தியுடன் உரைக்கின்றனரோ, அவர்கள் பூரண விடுதலையை அடைவர். (பாகவதம் 12.13.18)

## புராணங்களில் சிறந்தது

எல்லா நதிகளிலும் கங்கை எவ்வாறு சிறந்ததோ, கடவுள்களில் அச்யுதர் (கிருஷ்ணர்) எவ்வாறு உயர்ந்தவரோ, வைஷ்ணவர்களில் எவ்வாறு சிவன் உயர்ந்தவரோ, அதே போல எல்லா புராணங்களிலும் ஸ்ரீமத் பாகவதமே உயர்ந்ததாகும். (பாகவதம் 12.13.16)

அமிர்தக் கடலான ஸ்ரீமத் பாகவதம் கேட்கப்படாத வரை மட்டுமே, சாதுக்களின் சங்கத்தில் மற்ற புராணங்கள் பிரகாசிக்க இயலும். (பாகவதம் 12.13.14.)

## நாம் அணுகுவது எங்ஙனம்

ஸ்ரீமத் பாகவதத்தை நாம் பக்தரிடமிருந்து மட்டுமே கேட்க வேண்டும். அத்தகு பாகவத பக்தரிடமிருந்து நாம் நேரடியாக பாகவதத்தை கேட்கும்போது, அவரிடமிருந்து பக்தி சக்தியையும் பெறுகின்றோம்.

இந்த நவீன யுகத்தில் ஸ்ரீமத் பாகவதத்தை ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு செயல்முறை விளக்கத்துடன் பிரச்சாரம் செய்திருக்கிறார். ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் காரணமற்ற கருணையினால் மட்டுமே நாம் ஸ்ரீமத் பாகவதத் தலைப்புகளுக்குள் எளிமையாக செல்ல முடியும். அவரது பரம்பரையில் வரும் ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த ஸ்வாமி ஸ்ரீல பிரபுபாதர், ஸ்ரீமத் பாகவதத்திற்கு, எளிமையான, ஆனால் மிக அழகான கருத்துகளுடன் விளக்கவுரை எழுதியுள்ளார். அவரால் எழுதப்பட்ட பாகவத உரை, கடினமான தத்துவங்களையும், எளிய மொழியில் எல்லோரும் புரிந்துகொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது.

(12 காண்டங்கள், 18 புத்தகங்கள், 288 வண்ணப்படங்கள்; இஸ்கான் கோவில்களில் தமிழ் உட்பட பல்வேறு மொழிகளில் கிட்டும்)



### கேட்பதற்கான தகுதிகள்

ஸ்ரீமத் பாகவதத்தை தொடர்ந்து கேட்டு, அதனைப் புரிந்து கொண்டு, அதன்படி நடப்பவர்கள் தூய்மையான கிருஷ்ண பிரேமையை அடைவது உறுதி. வேத சடங்குகளின் பலன்கள், பொருளாதார முன்னேற்றம், கடவுளுடன் ஒன்றாகும் முக்தி போன்றவற்றை ஒருவன் குப்பையை போன்று தூக்கி யெறிய வேண்டும், அவ்வாறு செய்ய இயலாதவன் ஸ்ரீமத் பாகவதத்தை புரிந்து கொள்ள முடியாது.

ஸ்ரீமத் பாகவதத்தின் முக்கியப் பகுதி அதன் பத்தாம் காண்டம்; அதிலுள்ள கிருஷ்ண லீலைகளை துறவு மனப்பான்மையுடன் அணுகுவோர் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். ஸ்ரீமத் பாகவதத்தின் மீது ஈர்ப்பு இல்லாவிடில், ராஸ நடனம் போன்ற லீலைகளை புரிந்துகொள்ள முயற்சி செய்யக் கூடாது. தூய பக்தித் தொண்டினால் மட்டுமே ஸ்ரீமத் பாகவதத்தை சுவைக்க முடியும்.

### எச்சரிக்கை

ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பதில் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதும் அவசியம். இதனை பக்தரிடமிருந்து மட்டுமே கேட்க வேண்டும். அபக்தர்களிடமிருந்து, அதாவது வைஷ்ணவரல்லாதவரிடமிருந்து நாம் இதனைக் கேட்கக் கூடாது. பத்ம புராணத்திலுள்ள பின்வரும் எச்சரிக்கையினை ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு வழங்குகிறார்:

*அவைஷ்ணவ-முகோத்கீர்ணம்*
*பூதம் ஹரி-கதாம்ருதம்*
*ஸ்ரவணம் நைவ கர்தவ்யம்*
*ஸர்போச்சிஷ்டம் யதா பய:*

"வைஷ்ணவராக இல்லாதவரிடமிருந்து கிருஷ்ணரைப் பற்றிய எந்த விஷயத்தையும் கேட்கக் கூடாது. ஏனெனில், பாம்பின் உதடுகள் பட்ட பாலில், எவ்வாறு விஷத்தின் பாதிப்பு இருக்குமோ, அவ்வாறே அந்த அவைஷ்ணவர்கள் வழங்கும் கிருஷ்ண கதையிலும் விஷம் கலந்துள்ளது."

பக்தரல்லாத நிறைய நபர்கள் தங்களது வயிற்றுப் பிழைப்பிற்காக பாகவதத்தை மேடைபோட்டு ஒரு வார காலம் பேசுகின்றனர். பாகவத சப்தாஹ என்றும் இன்னும் வேறு தலைப்புகளிலும் அவர்கள் பேசுவதை நாம் கேட்கக் கூடாது. அது நமது பக்தியை முழுவதுமாக அழித்துவிடும்.

### ஸ்ரீல பிரபுபாதரின் பரிந்துரைகளில் சில

(1) "பகவத் கீதை உண்மையுருவில்" படித்த பிறகு ஸ்ரீமத் பாகவதத்தை படிப்பது நன்று. (2) ஸ்ரீமத் பாகவதத்தின் எல்லா பகுதிகளும் சுவையானதாக இருந்தாலும், முதல் காண்டத்திலிருந்து தொடங்கி படிப்படியாக இதர காண்டங்களைப் படிக்க வேண்டும். (3) இஸ்கான் கோவில்களில் தினசரி காலை நேரத்தில் நடைபெறும் பாகவத வகுப்பில் கலந்து கொண்டு பாகவதத்தை கேட்க வேண்டும்.

ஓம் தத் சத்.

பக்திப் பரவசத்தை ஏற்படுத்துவதில் அடுத்த அங்கமான, விக்ரஹ வழிபாடு, என்பது குறித்து அடுத்த இதழில் விவரிக்கப்படும்.

ஜெய கோபிநாத தாஸ் B.E, அவர்கள் இஸ்கானின் சென்னை கிளையில் முழு நேர பிரம்மச்சாரியாக வசித்து வருகிறார், கல்லூரி மாணவர்களிடம் பிரச்சாரம், புத்தக விநியோகம், கோயில் நிர்வாகம் போன்றவற்றில் ஈடுபட்டு தொண்டு புரிந்து வருகிறார்.

## இஸ்கான்—ஓர் அறிமுகம்

ஹரே கிருஷ்ண இயக்கம் என்ற பெயரில் உலகெங்கிலும் பிரபலமாக அறியப்படும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (இஸ்கான், ISKCON—International Society for Krishna Consciousness) 1966ம் ஆண்டில் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் தொடங்கப்பட்டு, இன்று உலகெங்கிலும் நூற்றுக்கணக்கான கோவில்களைக் கொண்டுள்ளது. முறையான குரு சீடப் பரம்பரையில் வரும் இந்த இயக்கம், பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற வேத சாஸ்திரங்களின் அடிப்படையில் கிருஷ்ண பக்தியினை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றது. கலி யுகத்தில் ஆன்மீகப் பக்குவம் அடைவதற்கு ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹாமந்திரத்தினை உச்சரிப்பது மட்டுமே வழி என்று எல்லா வேத சாஸ்திரங்களும் எடுத்துரைக்கின்றன. அந்த ஹரி நாம சங்கீர்த்தனத்தினை ஜாதி, மதம், இனம், மொழி, அந்தஸ்து, கல்வி போன்ற எந்த பேதங்களும் இன்றி மனித குலத்தின் மேன்மைக்காக பரப்பி வரும் இவ்வியக்கம், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, மலேசியா, தென் ஆப்பிரிக்கா உட்பட நூற்றுக் கணக்கான நாடுகளிலும் இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் உற்சாகத்துடன் செயல்பட்டு வருகின்றது.

### இயக்கத்தின் செயல்பாடுகள்

* ஹரி நாம சங்கீர்த்தனம்
* பகவத் கீதை போன்ற வேத சாஸ்திரங்களை விநியோகிப்பதன் மூலம் மக்களுக்கு ஆன்மீக அறிவினைப் புகட்டுதல்
* நவீன காலத்திற்குத் தகுந்த யோகப் பயிற்சியை கற்றுத் தருதல்
* மிகச்சிறந்த விக்ரஹ வழிபாடு
* அனைத்து மக்களுக்கும் பிரசாத விநியோகம்
* திசைமாற்றப்பட்ட நாகரிகத்தின் உண்மை உருவை வெளிக்காட்டுதல்
* கல்லூரி மாணவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சி
* இல்லங்களில் ஆன்மீக நிகழ்ச்சிகள்... மற்றும் பல

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தினை தொடர்ந்து இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் வெளியிட்டு வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் காண்டம், ஸ்லோகம் ஒன்று

(*தொடர்ச்சி*) மனசாட்சியற்ற நபர்கள் எடுத்தவுடன் பத்தாம் காண்டத்திற்குச் செல்வதோடு, குறிப்பாக பகவானின் ராஸ நடனத்தை வர்ணிக்கும் ஐந்து அத்தியாயங்களுக்குச் சென்று விடுகின்றனர். ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள இப்பகுதிதான் இந்த மாபெரும் காவியத்தின் மிகவும் இரகசியமான பகுதியாகும். பகவானைப் பற்றிய தெய்வீக அறிவில் ஒருவன் முழுமையாக நிலைபெறாவிடில், ராஸ நடனம் என்றழைக்கப்படும் பகவானின் வழிபடத்தக்க தெய்வீக லீலைகளையும் கோபியர்களுடனான அவரது காதல் விவகாரங்களையும் அவன் தவறாகவே புரிந்துகொள்வான் என்பது நிச்சயம். இத்தகு விஷயங்கள் ஆன்மீகத்தின் மிகவுயர்ந்த நிலைகளாகும், பரமஹம்ஸ நிலையை படிப்படியாக அடைந்த முக்திபெற்ற நபர்கள் மட்டுமே இந்த ராஸ நடனத்தின் தெய்வீக அனுபவத்தைச் சுவைக்க முடியும். ஆகவே, பகவத் லீலைகள் எனும் சாரத்தை உண்மையாக அனுபவிப்பதற்கு முன், படிப்படியாக ஆன்மீகத் தன்னுணர்வை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பை ஸ்ரீல வியாசதேவர் பாகவதத்தைப் படிப்பவருக்கு அளிக்கின்றார். எனவே, அவர் *தீமஹி* என்னும் காயத்ரி மந்திரத்தை காரணத்துடன் உச்சரிக்கின்றார். இந்த காயத்ரி மந்திரம் ஆன்மீகத்தில் முன்னேறிய நபர்களுக்கானது. காயத்ரி மந்திரத்தை ஜபிப்பதில் ஒருவர் வெற்றி பெற்றால், பகவானின் தெய்வீக நிலையினுள் அவர் நுழைய முடியும். காயத்ரி மந்திரத்தை அவ்வாறு வெற்றிகரமாக ஜபிப்பதற்கு ஒருவன் பிராமண குணங்களைப் பெற்றிருத்தல் அவசியம், அல்லது ஸத்வ குணத்தில் பக்குவமாக நிலைபெற்றிருக்க வேண்டும். அதன் பின்னர், பகவான், அவரது திருநாமம், புகழ், குணங்கள் போன்றவை அனைத்தையும் உணரக்கூடிய தெய்வீக நிலையை அவன் அடைய முடியும்.

பகவானின் ஸ்வரூபத்தைப் பற்றிய வர்ணனைகளைக் கொண்ட இந்த ஸ்ரீமத் பாகவதம், அவரது அந்தரங்க சக்தியால் தோற்றுவிக்கப்பட்டதாகும். இந்த சக்தி, நமது அனுபவத்திற்கு உட்பட்டதும் ஜடவுலகப் படைப்பிற்கு காரணமானதுமான பகிரங்க சக்தியிலிருந்து வேறுபட்டதாகும். இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை ஸ்ரீல வியாசதேவர் மிகத் தெளிவாக இச்சுலோகத்தில் காட்டியுள்ளார். அந்தரங்க சக்தியின் தோற்றம் உண்மையானது என்றும், ஆனால் ஜட ரூபத்திலுள்ள பகிரங்க சக்தியின் தோற்றமோ தற்காலிகமானதும் பாலைவனத்துக் கானல் நீரைப் போல மாயையானதுமே என்று ஸ்ரீ வியாசதேவர் இங்கு கூறுகின்றார். பாலைவனத்துக் கானலில் உண்மையான நீர் இல்லை. நீரைப் போன்ற தோற்றம் மட்டுமே காணப்படுகின்றது. உண்மையான நீர் வேறெங்கோ இருக்கிறது. ஜடப் படைப்பின் தோற்றம் உண்மையைப் போல காட்சியளிக்கிறது, ஆனால் அஃது ஒரு பிம்பமே, அதன் நிஜ ரூபம் ஆன்மீக உலகில் இருக்கிறது. பூரண உண்மை ஆன்மீக வானில் இருக்கின்றது, ஜட வானில் இல்லை. ஜட வெளியிலுள்ள அனைத்துமே சார்ந்த உண்மை எனப்படும். அதாவது ஓர் உண்மை மற்றொன்றைச் சார்ந்திருக்கிறது. இயற்கையின் முக்குண சேர்க்கையால் உண்டாகியுள்ள இந்த பிரபஞ்சப் படைப்பின் தற்காலிக தோற்றங்கள், கட்டுண்ட ஆத்மாவின் குழம்பிய மனதில் உண்மையைப் பற்றிய மாயையை உருவாக்குவதற்காகப் படைக்கப்பட்டன. அத்தகு கட்டுண்ட ஆத்மாக்கள், பிரம்மா, இந்திரன், சந்திரன் போன்ற உயர்ந்த தேவர்கள் உட்பட பல்வேறு உயிரினங்களாக தோன்றுகின்றனர். உண்மையில், படைக்கப்பட்ட இவ்வுலகில் உண்மை ஏதும் இல்லை. இருப்பினும், முழுமுதற் கடவுள் தமது தெய்வீக உபகரணங்களுடன் நித்தியமாக வாழும் ஆன்மீக உலகில் உண்மையான உண்மை இருப்பதால், இங்குள்ளவையும் உண்மையைப் போலத் தோன்றுகின்றன.

சிக்கலான ஒரு கட்டிடத்தின் முதன்மை பொறியாளர் அந்த கட்டுமானப் பணியில் நேரடியாக பங்கேற்பதில்லை. ஆனால் அனைத்தும் அவரது ஆணையின் கீழ் இயங்குவதால், அதன் மூலை முடுக்குகளெல்லாம் அவருக்குத் தெரியும். நேராகவும் சரி, மறைமுகமாகவும் சரி, கட்டிடத்தைப் பற்றிய அனைத்தையும் அவர் அறிவார். அதுபோலவே, இப்பிரபஞ்சத்தின் செயல்கள் தேவர்களால் நிறைவேற்றப்பட்டாலும், இதன் பரம அதிகாரியான ஸ்ரீ கிருஷ்ணருக்கு இதன் மூலை முடுக்குகள் அனைத்தும் தெரியும். பிரம்மாவிலிருந்து அற்பமான எறும்பு வரை இந்த ஜடப் படைப்பில் யாருமே சுதந்திரமானவர் அல்லர். பகவானின் கரம் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது.

அவரிடமிருந்தே எல்லா ஜடப் பொருள்களும், எல்லா ஆன்மீகப் பொறிகளும் தோன்றுகின்றன. இந்த ஜடவுலகில் என்னவெல்லாம் படைக்கப்பட்டுள்ளதோ, அவையனைத்தும் பூரண உண்மையான பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து தோன்றிய ஜட சக்தியும் ஆன்மீக சக்தியும் கலந்த கலவையே ஆகும். ஆய்வுக்கூடத்தில் இருக்கும் வேதியியல் வல்லுநரால் ஹைட்ரஜனையும் ஆக்ஸிஜனையும் கலந்து நீரை உற்பத்தி செய்ய முடியும். ஆனால், உண்மை என்னவெனில், பரம புருஷரின் வழிகாட்டுதலின்படியே ஓர் உயிர்வாழி ஆய்வுக் கூடத்தில் பணியாற்ற முடியும். மேலும், அவன் உபயோகிக்கும் பொருள்களும் இறைவனாலேயே வழங்கப்படுகின்றன. நேரடியாகவோ மறைமுகமாகவோ பகவான் எல்லாவற்றையும் அறிந்தவர், அனைத்து நுணுக்கமான விபரங்களையும் அவர் நன்கறிவார், மேலும், அவர் பூரண சுதந்திரமானவர். அவர் தங்கச் சுரங்கத்துடன் ஒப்பிடப்படுகிறார், வெவ்வேறு ரூபத்திலிருக்கும் பிரபஞ்சப் படைப்புகளை தங்கத்திலிருந்து செய்யப்படும் மோதிரம், ஆரம் போன்றவற்றுடன் ஒப்பிடலாம். தங்க மோதிரமும் ஆரமும், சுரங்கத்திலுள்ள தங்கத்துடன் தன்மையில் ஒன்றானவை, ஆனால் சுரங்கத்திலுள்ள தங்கம் அளவில் வேறுபட்டதாகும். எனவே, பூரண உண்மை ஒரே சமயத்தில் ஒன்றாகவும் வேறுபட்டதாகவும் விளங்குகிறது. பூரண உண்மையோடு முற்றிலும் சமமானது எதுவும் இல்லை, ஆனால் அதே சமயத்தில் பூரண உண்மையிடமிருந்து சுதந்திரமானதும் எதுவும் இல்லை.

முழு பிரபஞ்சத்தையும் நிர்மாணிக்கும் பிரம்மாவிலிருந்து தொடங்கி, அற்ப எறும்பு வரையுள்ள எல்லா பந்தப்பட்ட ஆத்மாக்களும் படைக்கின்றனர், ஆனால் இவர்களில் யாரும் பரம புருஷரிடமிருந்து சுதந்திரமானவர் அல்லர். உலகாயத வாதி, தன்னைத் தவிர வேறெந்த படைப்பாளியும் இல்லை என்று தவறாக எண்ணுகின்றான். இது மாயை என்று அழைக்கப்படுகிறது. அறிவு பற்றாக்குறையின் காரணமாக, உலகாயதவாதி, தனது குறைபாடுடைய புலன்களின் வரம்புக்கு அப்பால் காண முடியாமல், உயர்ந்ததோர் புத்தியின் உதவி இல்லாமல் ஜடம் அதன் வடிவத்தை தானாகவே ஏற்கின்றது என்று நினைக்கிறான். இது தவறு என்பதை இப்பதத்தில் ஸ்ரீல வியாசதேவர் நிரூபிக்கின்றார்: "பூரண உண்மையே அனைத்திற்கும் மூலம் என்பதால், அந்த பூரண உண்மையின் உடலிலிருந்து எதுவுமே சுதந்திரமானதாக இருக்க முடியாது." உடலுக்கு என்ன நேர்ந்தாலும், விரைவில் அஃது உடலின் உரிமையாளருக்குத் தெரிந்து விடுகிறது. அதைப் போலவே, படைக்கப்பட்டவை எல்லாம் பூரண உண்மையின் உடலாகும். எனவே, படைப்பில் நிகழும் அனைத்தையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பரம்பொருள் அறிகின்றார்.

பூரண உண்மை, அல்லது பிரம்மனே அனைத்திற்கும் இறுதி மூலம் என்று *ஸ்ருதி* மந்திரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்தும் அவரிடமிருந்தே தோன்றுகின்றன, அனைத்தும் அவராலேயே பராமரிக்கப்படுகின்றன. இறுதியில், அனைத்தும் அவருக்குள் ஒடுங்கிவிடுகின்றன. அதுவே இயற்கையின் நியதியாகும். *ஸ்மிருதி* மந்திரத்திலும் இஃது உறுதி செய்யப்பட்டுள்ளது. பிரம்மாவின் கல்பத் தொடக்கத்தில் யாரிடமிருந்து அனைத்தும் தோன்றுகின்றதோ, இறுதியில் அனைத்தும் யாரிடம் சென்று ஒடுங்கிவிடுகிறதோ, அவரே பூரண உண்மை அல்லது பிரம்மன் என்று அதில் கூறப்பட்டுள்ளது. கிரக அமைப்புகள் அனைத்திற்கும் இறுதி மூலம் சூரியனே என்று ஜட விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர், ஆனால் சூரியனின் மூலத்தை அவர்களால் விளக்க முடிவதில்லை. இங்கு அந்த ஆதிமூலம் விளக்கப்பட்டுள்ளது. வேத இலக்கியங்களின்படி, பிரம்மதேவர் (அவரை நாம் சூரியனோடு ஒப்பிடலாம்) முடிவான சிருஷ்டி கர்த்தா அல்ல. புருஷோத்தமரான முழுமுதற் கடவுளால் பிரம்மாவிற்கு வேத அறிவு கற்பிக்கப்பட்டது என்று இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டுள்ளது. வேறெந்த ஜீவனும் இல்லாத அந்த சமயத்தில் பிரம்மாவே முதல் ஜீவராசியாக இருந்ததால் அவருக்கு வேறெவரும் ஊக்கமளித்திருக்க முடியாது என்று ஒருவர் வாதிடலாம். இரண்டாம் நிலை சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா, அவரது படைக்கும் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் முழுமுதற் கடவுளால் ஊக்கமளிக்கப்பட்டார் என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எல்லாப் படைப்புகளுக்கும் பின்னணியில் உள்ள மிகவுன்னத பேரறிஞர், பூரண புருஷோத்தமரான ஸ்ரீ கிருஷ்ணரே. ஜடப் பொருள்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ள *ப்ரக்ருதி* அல்லது படைப்புச் சக்தி தனது மேற்பார்வையிலேயே செயல்படுகிறது என பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். ஆகவே, ஸ்ரீல வியாசதேவர் இங்கு பிரம்மாவை வழிபடவில்லை, மாறாக, பிரம்மாவின் படைப்புத் தொழிலில் அவரை வழிநடத்தும் முழுமுதற் கடவுளை வழிபடுகின்றார். இந்த ஸ்லோகத்திலுள்ள *அபிக்ஞ, ஸ்வராட்* ஆகிய சொற்கள் குறிப்பிடத்தக்கவை. இவ்விரு சொற்களும் பரம புருஷரிடமிருந்து பிற எல்லா ஜீவராசிகளையும் வேறுபடுத்திக்காட்டுகின்றன. வேறெந்த ஜீவராசியும் *அபிக்ஞ* நிலையிலோ *ஸ்வராட்* நிலையிலோ இல்லை. அதாவது வேறு எவரும் பூரண உணர்வுடையவராகவோ பூரண சுதந்திரமானவராகவோ இல்லை. பிரம்ம தேவரே படைப்புத் தொழிலை நிறைவேற்ற பகவானை தியானிக்க வேண்டியுள்ளது. ஐன்ஸ்டீன் போன்ற பெரும் விஞ்ஞானிகளைப் பற்றி கூற வேண்டுமா! அத்தகு விஞ்ஞானிகளின் மூளைகள் நிச்சயமாக மனிதனால் உற்பத்தி செய்யப்படக் கூடியவையல்ல. விஞ்ஞானிகளால் அத்தகு மூளையை உற்பத்தி செய்ய முடியாது என்னும் பட்சத்தில், பகவானின் அதிகாரத்தை மறுக்கும் முட்டாள் நாத்திகர்களைப் பற்றிக் கூற என்ன இருக்கிறது! இறைவனோடு ஒன்றாகக் கலந்து விடுவோம் என்று தங்களைத் தாங்களே புகழ்பாடிக் கொள்ளும் அருவவாதிகளான மாயாவாதிகளும், *அபிக்ஞ* அல்லது *ஸ்வராட்* என்னும் நிலையில் இல்லை. அத்தகு அருவவாதிகள், இறைவனோடு ஒன்றாகக் கலப்பதற்குரிய அறிவைப் பெற கடுந்தவங்களை மேற்கொள்கின்றனர். ஆனால் இறுதியில், மடம் அல்லது கோவில் கட்டுவதற்குப் பணம் தரும் சில பணக்கார சீடர்களை நம்பியிருப்பவர்களாக அவர்கள் ஆகிவிடுகின்றனர்.

(அடுத்த இதழில் தொடரும்)

# தத்துவத் துளிகள்

நாராயணரின் தூய பக்தர் எந்தவித பௌதிக அபாயத்தைக் கண்டும் அச்சமடைவதில்லை. பக்தரல்லாதோர் பக்தர்களை அடிக்கடி தொந்தரவு செய்வது வழக்கம் என்றபோதிலும், புருஷோத்தமரான முழுமுதற் கடவுளின் கருணையை முழுமையாக நம்பியுள்ள தூய பக்தன், பொறாமையினால் செய்யப்படும் அத்தகு செயல்களினால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.

தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்,
ஸ்ரீமத் பாகவதம் 9.4.47, பொருளுரை

ஞானத்திற்கு இணையான கண் கிடையாது, வாய்மைக்கு இணையான தவம் கிடையாது, பற்றுதலுக்கு இணையான துன்பம் கிடையாது, பற்றின்மைக்கு இணையான மகிழ்ச்சி கிடையாது.

சாணக்கிய பண்டிதர்

முழுமுதற் கடவுளின் மீதும் ஆன்மீக குருவின் மீதும் அசையாத நம்பிக்கைக் கொண்டுள்ள மகாத்மாக்களுக்கு மட்டுமே வேத ஞானத்தின் அனைத்து விஷயங்களும் தானாகவே தெளிவுபெறும்.

ஷ்வேதாஷ்வதர உபநிஷத் 6.23

எங்கெல்லாம் ஹரிகதை நடைபெறுகின்றதோ அவ்விடங்கள் அனைத்துமே புண்ணிய ஸ்தலங்கள்தான்.

ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர்

காற்றின் வலிமையினை அறியாத மேகக் கூட்டம் போன்று, பௌதிக வாழ்வில் இருப்பவன் தன்னைத் தாங்கிச் செல்லும் காலத்தின் வலிமையினை அறியாமல் உள்ளான்.

பகவான் கபிலர்,
ஸ்ரீமத் பாகவதம் 3.30.1

புத்திசாலி மனிதன், தவறான நபர்களின் தொடர்புகளை விட்டுவிட்டு, எவருடைய வார்த்தைகள் ஒருவனது மனதிலுள்ள அளவுகடந்த பற்றுதல்களை வெட்டி எறியுமோ அந்த சாது பக்தர்களின் தொடர்புகளை நாட வேண்டும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்,
ஸ்ரீமத் பாகவதம் 11.26.26

மழுங்கிய பௌதிகப் புலன்களைக் கொண்டு கிருஷ்ணரை யாரும் புரிந்துகொள்ள முடியாது. திவ்யமான அன்புத் தொண்டினால் கிருஷ்ணர் திருப்தியடையும்போது, அவரே தன்னை வெளிப்படுத்துவார்.

ஸ்ரீல ரூப கோஸ்வாமி,
பக்திரஸாம்ருத ஸிந்து 1.2.234

மாயையில் இருக்காதே, நித்தியமான உண்மையை நோக்கிச் செல். இருளில் இருக்காதே, வெளிச்சத்தை நோக்கிச் செல். மீண்டும் பிறவி எடுக்காதே, அமரத்துவத்தை நோக்கிச் செல்.

பிருஹத்-ஆரண்யக உபநிஷத் 1.3.28

## கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

### நவம்பர்

1—பூகர்ப கோஸ்வாமி மறைவு நாள்
நான்காம் சாதுர்மாதத்தின் இறுதி நாள்

2—துளசி-சாலிக்கிராம திருமணம்
ஸ்ரீ நிம்பார்க ஆச்சாரியர் தோன்றிய நாள்
பீஷ்ம பஞ்சகத்தின் இறுதி நாள்

13—உத்பன்ன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:10–10:03

28—மோக்ஷத ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:17–10:08
பகவத் கீதை உபதேசிக்கப்பட்ட நாள்

### டிசம்பர்

5—ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூர் மறைவு நாள்

12—ஸப்ல ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:24–10:14
ஸ்ரீ தேவானந்த பண்டிதர் மறைவு நாள்

17—ஸ்ரீ லோசன தாஸ தாகூர் தோன்றிய நாள்

19—ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீ ஜகதீச பண்டிதர் மறைவு நாள்

28—புத்ரத ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:32–09:22

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635019. போன்: (04344) 226222. இ-மெயில்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612001. போன்: 99949 49108. இ-மெயில்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641014. போன்: (0422) 2626508/9. இ-மெயில்: bhakti.vinoda.swami@pamho.net www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600041. போன்: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 இ-மெயில்: info@iskconchennai.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி. நகர், அடையார், சென்னை - 600020. போன்: (044) 24456199. இ-மெயில்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636012. போன்: (0427) 2001686, 2345545, 94421 53427. இ-மெயில்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627002. போன்: (0462) 2501640. இ-மெயில்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629002. போன்: 98946 00108. இ-மெயில்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625001. போன்: (0452) 2346472. இ-மெயில்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632006. போன்: (0416) 2241654, 94429 53417. இ-மெயில்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620006. போன்: (0431) 2433945. இ-மெயில்: ratishadas@yahoo.co.in

---

**பாண்டிச்சேரி**—57, MG ரோடு, வரதராஜ பெருமாள் கோவில் எதிரில், பாண்டிச்சேரி - 605001. போன்: (0413) 2221402, 94434 68923, 99408 64086. இ-மெயில்: sarvananda2003@yahoo.com

---

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை. போன்: 93623 10556. இ-மெயில்: adgd.jps@gmail.com

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637001. போன்: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600012. போன்: 98400 87067. இ-மெயில்: jai.gopinath.jps@pamho.net


**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607803. போன்: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. போன்: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களை தொடர்பு கொள்ளவும்.


இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.

கலி யுக மக்களின் பாவகரமான வாழ்வை அகற்றி அவர்களுக்கு பேரின்பம் அளிக்கக் கூடியது ஹரி நாம சங்கீர்த்தனமே அன்றி வேறில்லை. இதை உணர்ந்த கிருஷ்ண பக்தர்கள், உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சொந்த நலனையும் அபாயங்களையும் பொருட்படுத்தாமல், கிருஷ்ண பக்தியை மக்களுக்கு வழங்கி மாபெரும் சமூகத் திருப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். ஐரோப்பாவில் உள்ள ஒரு சிறிய நாடு, மாண்டிநேக்ரோ. இங்கு கிருஷ்ண பக்தியை பயிற்சி செய்வதே கடினம், நாம சங்கீர்த்தனம் இயலுமோ! நீண்ட முயற்சிக்குப் பின் வரலாற்றில் முதல்முறையாக அங்கு நடந்த ஹரி நாம சங்கீர்த்தனத்தின் புகைப்படம் தங்களுக்காக இங்கு வழங்கப்பட்டுள்ளது. [நாள்: 25 ஆகஸ்ட் 2009]



ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே


BHAGAVAD GITA
பகவத் கீதை
உண்மையுருவில்
7 கோடி பிரதிகளுக்கு மேல்
விநியோகிக்கப்பட்ட ஒரே பகவத் கீதை
பகவத் கீதை
உண்மையுருவில்
* வேத ஞானத்தின் மணிமகுடம், உபநிஷத்துகளின் சாரம்
* ஆத்ம ஞானம், கர்ம யோகம், ஞான யோகம், தியான யோகம், பக்தி யோகம்
* அனைவருக்கும் அவசியமான ஆற்றல் மிகு ஆன்மீகக் கருத்துகள்
* 700 ஸ்லோகங்களும் அடங்கிய முழு பதிப்பு
* அதிகாரப்பூர்வமான குரு பரம்பரையில் வந்த தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த ஸ்வாமி பிரபுபாதரால் உள்ளது உள்ளபடி கலப்படமின்றி வழங்கப்பட்டது
* 56 மொழிகளில் கிடைக்கக்கூடியது
* பல்கலைக்கழகங்களின் பாட புத்தகம்
* 944 பக்கங்கள், 16 வண்ணப் படங்கள்